# நம்பிக்கையின் வீடு

## தேவன் நான் நம்பி இருக்கிற துருகம்



நம்பிக்கை 6 - வீடு 2

இது நம்பிக்கையின் வெளியீடு

ஏப்ரல் - மே - ஜூன் 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என்றும் என் அன்புக்குரிய தமிழ் நெஞ்சங்களே!

இந்த சஞ்சிகை ஆரம்பித்து ஆறாவது வருடத்தின் இரண்டாவது சஞ்சிகை மூலமாக உங்கள் யாவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். உங்கள் யாவருக்கும் எமது அன்பின் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மனிதனும் வித்தியாசமான நம்பிக்கைகளை உடையவர்களாக வாழ்கிறார்கள். அதுவும் காலத்துக்குக் காலம் மாறுபட்டவையாகவும், இடத்துக்கிடம், நாட்டுக்கு நாடு வித்தியாசமானவைகள் ஆகவும் இருக்கின்றது.

நான் இலங்கை சென்றிருந்த போது அங்கே ஒருவருடைய திருமணக் காரியத்தைக் குறித்து அறிந்தேன். அந்தத் திருமணம் இந்தியாவில் நடைபெற்றது. அதன் விபரத்தை உங்களுக்கு அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட நபர் காதலித்த பெண்ணையே திருமணம் செய்ய இரு வீட்டாரும் சம்மதம் தெரிவித்து திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அவர்கள் இருவருடைய ஜாதகத்தையும் பார்த்த போது பெண்ணுக்குத் தாலிப் பாக்கியம் இல்லையென்றும், அப்படி இந்தத் திருமணம் நடைபெற்றால் கணவன் இறந்து போய் விடுவார் என்றும் சொல்லப்பட்டது. இதற்கான தீர்வு தான் என்ன என்று விசாரித்த போது ஜோசியர் ஒரு ஆலோசனை கூறினார்.

அதாவது முதலாவது ஒரு வாழை மரத்துக்குத் தாலி கட்ட வேண்டும் என்றும், பின்பு அந்த வாழை மரத்தை வெட்டிப் போட வேண்டும் என்றும். பின்பு பெண்ணுக்குத் தாலி கட்டினால் தாலிப்பாக்கியம் நிலைக்கும் என்றார். ஆகவே அதன் படியாகத் திருமணம் நடைபெற்றது. ஒரு சாதாரண வாழை மரத்தைத் திருமணம் செய்து கொள்வது என்பது வாழ்வை நிலைக்கப் பண்ணுமாய் இருந்தால் தெய்வம் எதற்கு?

சில வேளைகளில் நம்மை அறியாமலேயே நாம் மற்றவர்கள் சொல்லும், செய்யும் மூட நம்பிக்கைகளுக்கு அடிமையாகி விடுகின்றோம். நாம் நம்மையே ஆராய்ந்து பார்த்து சிந்திக்கிறவர்களாக இருக்க வேண்டும். இப்படியான நம்பிக்கைகள் சரியானதல்ல. மூட நம்பிக்கைகளை விட்டு இறை நம்பிக்கை உடையவர்களாக மாறுங்கள்.

**போதகர். ஸ்ரீதரன் ஜெயராஜா**
**ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்

"இறைச்சுடர்"
ஸ்ரீதரன் ஜெயராஜா

வெளியீட்டுக் குழு
சுயாதீன மெதடிஸ்த
தமிழ் திருச்சபை

41-3045 Southcreek Rd
Mississauga, Ont
L4X 2X6

தொடர்புகளுக்கு
(905) 232 – 3910
(416) 697 – 1321

Email
**fmtchurch@gmail.com**

# உள்ளே....

ஆரோக்கிய வாழ்வு

படித்ததில் பிடித்தவை

சமயக் கண்ணோட்டம்

சங்கீதப் பார்வை


சிந்தனைக்குச் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரோக்கிய வாழ்வு

## சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் வாழைப்பூ!



தற்போது நாம் உண்ணும் உணவில் உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் கிடைப்பதில்லை. இரசாயனம் கலந்த உணவையே சாப்பிட நேரிடுகிறது. மேலும் போதிய உடற்பயிற்சியின்மை, சில நேரங்களில் வேலைப்பளு, சரியான நேரத்திற்கு உணவு அருந்தாமை போன்றவையால் உடல் உறுப்புக்கள் பாதிக்கப்பட்டு செயலிழந்து சர்க்கரை நோயை உண்டாக்குகின்றன. இந்த நோயை வாழைப்பூ சாப்பிடுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

**சர்க்கரை நோய்:**
சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழைப்பூவை சுத்தம் செய்து சிறிது சிறிதாக நறுக்கி அதனுடன் சின்ன வெங்காயம், பூண்டு, மிளகு சேர்த்து பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால் கணையம் வலுப்பெற்று உடலுக்குத் தேவையான இன்சுலினைச் சுரக்கச் செய்யும். இதனால் சர்க்கரை நோய் கட்டுப்படும்.

**உடல் சூடு:**
இதே போன்று உடல்சூடு உள்ளவர்கள் வாழைப்பூவுடன் பாசிப்பருப்பு சேர்த்துக் கடைந்து நெய் சேர்த்து வாராவாரம் இருமுறை உண்டு வந்தால் உடல் சூடு குறையும்.

**மாதவிலக்கு:**
மாதவிலக்குக் காலங்களில் பெண்களுக்கு அதிக உதிரப் போக்கு உண்டாகும். அவர்கள் வாழைப்பூவின் உள்ளே இருக்கும் வெண்மையான பாகத்தை போதியளவு எடுத்து நசுக்கிச் சாறு பிழிந்து சிறிது மிளகு தூள் சேர்த்துக் கொதிக்க வைத்து அதனுடன் பனங்கற்கண்டு கலந்து அருந்தி வந்தால் உதிரப் போக்குக் கட்டுப்படும். உடல் அசதி, வயிற்றுவலி குறையும்.

**கை, கால் எரிச்சல்:**
கை, கால் எரிச்சலால் அவதிப்படுபவர்கள் வாழைப்பூவை இடித்து அதனுடன் சிற்றாமணக்கு எண்ணை சேர்த்து வதக்கி கை, கால் எரிச்சல் உள்ள இடங்களில் ஒற்றடம் கொடுத்து வந்தால் கை, கால் எரிச்சல் குணமாகும்.

**மலட்டுத் தன்மை:**
வாழைப்பூவை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் மலட்டுத் தன்மை நீங்கிக் குழந்தைப் பாக்கியம் பெறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெட்ட கொலஸ்ரோலைக் குறைக்கும் தனியா பொடி!

தனியா அல்லது மல்லிப் பொடியை உட்கொண்டால் அது இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தும் என்று பல ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

இன்றைய துரித உணவுக் கால கட்டத்தில் பெரும்பாலானோருக்கு சர்க்கரை நோயின் பாதிப்புக் காணப்படுகிறது. தனியா அல்லது மல்லிப் பொடியை உட்கொண்டால் அது இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தும் என்று பல ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

மல்லிப் பொடியில் 8% நார்ச்சத்து மற்றும் 2.9% கால்சியம் அடங்கியுள்ளது. மிகவும் ஆபத்தான சால்மொனெல்லா என்ற பாக்டீரியாவை அழிக்க மல்லி (தனியா) பயன்படுகிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. சால்மொனெல்லா பாக்டீரியா உணவு சம்பந்தமான நோய்களை உண்டாக்கும்.

நமது அன்றாடக உணவில் மல்லி (தனியா) போன்ற ஆரோக்கியமான மசாலாக்களை சேர்த்தால் இவ்வகை நோய்களில் இருந்து நம்மைப் பாதுகாக்கலாம்.

மல்லியில் பைடோந்யூரியெண்ட் குணங்கள் உள்ளதால் தான் அது நமக்கு பல மருத்துவ பயன்களை அளிக்கிறது. உடல் நல பலன்களைத் தவிர மல்லிப் பொடி பருக்களை நீக்கவும் பெரிதும் உதவுகின்றது.

மல்லிப் பொடியையும் மஞ்சளையும் அல்லது மல்லி சாற்றையும் பயன்படுத்தி பருக்களை பெரியளவில் குறைக்கலாம் மல்லிப் பொடி கொலஸ்ட்ராலை வெகுவாக குறைக்கும்.

மல்லியை பொடி அல்லது கொட்டை வடிவாக உட்கொண்டால் அது உங்கள் உடலில் உள்ள கெட்ட கொலஸ்ட்ராலை வெகுவாக குறைத்து நல்ல கொலஸ்ட்ராலை அதிகரிக்கும் என்று ஆய்வுகள் கூறுகின்றது.

மாதவிடாயின் போது இரத்தக் கசிவு அதிகமாக இருந்தால் மல்லிப் பொடியை அல்லது மல்லி விதையை வெந்நீரில் போட்டு உட்கொள்ளுங்கள். மேலும் மாதவிடாய் காலங்களில் வரும் வயிற்று வலியைப் போக்கும் சக்தி கொண்டது மல்லிப் பொடி.

மல்லி எந்த வடிவத்தில் (இலை, விதை, பொடி) இருந்தாலும் சரி அதில் உள்ள ஆன்டி ஆக்ஸிடண்ட் குணங்கள் உடலில் உள்ள இயக்க உறுப்புகளுக்கு எதிராகப் போராடும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## கொஞ்சம் சிரிங்க!!!



**டாக்டர்: நான் இல்லாத நேரம் நோயாளிங்க யாராவது வந்தாங்களா?**

**நர்ஸ்: நீங்க இருக்கிற நேரத்திலேயே யாரும் வாறதில்லையே டாக்டர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலர்ஜி எதனால் வருகிறது? இதோ தடுக்கும் முறைகள்!

உடலுக்கு ஒவ்வாத பொருட்கள் நுழையும் போது உடல் காட்டும் நோய் எதிர்ப்புத் தன்மையின் காரணமாக உருவாவது தான் அலர்ஜி. இதன் வெளிப்பாடாக தோல் அரிப்பு, மூக்கடைப்பு, தொடர் தும்மல், கண் எரிச்சல் மற்றும் நமைச்சல் போன்றவை தோன்றுகிறது. இதற்கான சரியான காரணத்தைக் கண்டு பிடித்தாலே தவிர வேறு எந்த மருந்துக்கும் குணமாகாது.

பலர் அலர்ஜியை ஆரம்பத்தில் பெரிதாகக் கருதாமல் விட்டு விடுகிறார்கள். மருத்துவரிடம் செல்லாமல் தங்களுக்குத் தெரிந்த மருந்துகளை உபயோகிக்கின்றனர். இதனால் அலர்ஜி குணமாவதற்குப் பதிலாக பெரிதாகி தொல்லை கொடுக்கிறது.

## அலர்ஜி ஏற்படுவதற்கான காரணங்கள்

தட்ப வெப்பம், உணவு, சுற்றச்சூழல் மாசு உட்பட பல காரணங்களால் அலர்ஜி உண்டாகிறது. மலரின் மரகந்தம், செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் நாய், பூனை ஆகியவற்றின் தோலில் உள்ள ஒரு பொருள், முடி ஆகியவற்றில் இருந்தும் அலர்ஜி ஏற்படலாம்.

அலர்ஜி ஏற்படுத்தும் பொருட்களுடன் தொடர்பு ஏற்பட்டதும் உடல் இம்யுனோகுளோபுலின் இ என்ற எதிர்ப்புப் பொருளை உற்பத்தி செய்கிறது. இதன் விளைவாக கண் மற்றும் சுவாச வழிகளில் ஹிஸ்டமின் போன்ற எதிர்ப்புத் தன்மை மிகுந்த பொருட்கள் உருவாகின்றன. இது போன்ற வேதிப் பொருட்கள் உடலில் உற்பத்தியாவதால் கண்ணில் நமைச்சல், கண்கள் வீங்கிச் சிவத்தல், மூக்கடைப்பு, மூக்கில் வடிதல், தொடர் தும்மல், இருமல், தோலில் சிவந்த தடிப்பு போன்ற அலர்ஜிக்கான அறிகுறிகள் உண்டாகிறது.


## அறிகுறிகள்

சாப்பிட்ட பின் நாக்கில் வெடிப்பு ஏற்படலாம், உடலில் அரிப்பு, சிறு கொப்பளங்கள் தோன்றலாம். குரல் வளையில் ஒருவித மாற்றங்களை உணரலாம், வாந்தி ஏற்படும். அடி வயிற்றுவலி வரலாம், மூச்சுவிடுவதில் தகராறு, பெரு மூச்சு விடுதல், வயிற்றுப் போக்கு போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். அலர்ஜி ஏற்பட்டால் குடல், சுவாசம், தோல், ரத்த செல்கள் ஆகியவற்றைப் பாதிக்கும் நோய்த் தடுப்பு மண்டலமும் அலர்ஜியால் பாதிப்புக்குள்ளாகலாம்.

வேர்க்கடலை, பட்டாணிக்கடலை, போன்ற பருப்பு வகைகள்தான் அதிக அலர்ஜியைத் தரக் கூடியவை. இவை இம்யுனோகுளோபின் என்ற ரசாயனத்தைச் சுரந்து நோய் எதிர்ப்பு மண்டலத்தைப் பாதிக்கச் செய்யும். முட்டை, பால், வேர்க்கடலை, சோயா மொச்சை, கோதுமை, முந்திரிக் கொட்டை, பாதாம் பருப்பு, மீன், நத்தை வகை போன்ற 9 வகை உணவுப் பொருட்கள் 90 சதவீதம் அலர்ஜி ஏற்படுத்தும் உணவுகளாக நிபுணர்கள் பட்டியலிட்டு உள்ளார்கள். இவற்றில் வேர்க்கடலை, மீன், நத்தை, கொட்டை உணவு வகைகளில் அலர்ஜி ஏற்பட்டால் அது வாழ்நாள் முழுவதும் நீடித்திருக்கும். மற்ற உணவுகள் தற்காலிகமாக ஒவ்வாமையை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### தடுப்பு முறைகள்!

அலர்ஜியைத் தடுக்கச் சிறந்த வழி அறிகுறிகளை அறிந்து கொண்டு அந்த வகை உணவுகளை உறுதியாகத் தவிர்த்து விடுவதுதான். வெளியில் சாப்பிட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் புதிய உணவு வகைகளை சாப்பிட வேண்டாம். வறுக்கப்பட்ட உணவுகள், வேக வைக்காமல், மாவு சேர்க்கப்பட்ட உணவுகள், சுவையை அதிகப்படுத்தப் பயன்படும் சூப், குழம்புகள் ஆகியவற்றைத் தவிர்க்கவும்.. சாப்பிட்டபின் பழவகைகளை உண்ண வேண்டாம்.

அலர்ஜி உடையவர்களுக்காகத் தனியாகத் தயாரிக்கப்படும் அலர்ஜியற்ற உணவு, உணவுப் பொருட்களை உண்ணலாம். பாலிதீன் பேப்பர் மற்றும் பிராணிகளின் ரோமம், தோலால் செய்யப்பட்ட பைகளில் உணவைப் பொட்டலம் கட்டிப் பயன்படுத்தக் கூடாது. அது ரசாயன மாற்றம் அடைந்து அலர்ஜியை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

நைலான் உள்ளிட்ட வழவழப்பான துணி வகைகளால் தோல் அலர்ஜி வரலாம். புதிய துணிகளில் உள்ள சாயம் ஒத்துக்கொள்ளாமல் போகலாம். எந்தத் துணியையும் துவைத்த பின் பயன்படுத்தவும், உள்ளாடைகளை நீண்ட காலத்திற்குப் பயன்படுத்துவதைத் தவிர்த்து அடிக்கடி மாற்றவும். சுத்தத்தால் அலர்ஜி தொல்லைகளைத் தவிர்க்கலாம்.

### உணவுகள்!



அலர்ஜி பிரச்சனை இருக்கும் நேரத்தில் உப்பில் ஊறவைத்த பொருட்களான ஊறுகாய், வற்றல், கருவாடு, கரம் மசாலா சேர்க்கப்படும் பிரியாணி உள்ளிட்ட உணவு வகைகள், குளிர்சாதனப் பெட்டியில் அதிக நாட்கள் வைத்திருக்கும் பால், தயிர், மட்டன், சிக்கன் ஆகியவற்றைச் சாப்பிடக் கூடாது. எண்ணையில் பொரித்து எடுக்கப்படும் பஜ்ஜி, போண்டா, பூரி ஆகியவற்றைத் தவிர்ப்பது நல்லது.

சீரகத்தை வறுத்துப் பொடியாக்கித் தினமும் தண்ணீரில் போட்டுக் காய்ச்சிக் குடித்து வருவதன் மூலம் அலர்ஜி ஏற்படுவதைத் தவிர்க்கலாம். மேலும் புதினாவை வாரத்தில் 3முறை உணவில் சேர்த்துக் கொள்வது அவசியம். மோரில் உப்புக் கலந்து வெள்ளரிக்காயை சிறிய துண்டுகளாக வெட்டிப்போட்டு சாப்பிடுவதன் மூலம் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கலாம். பசலைக் கீரை சூப் குடிப்பதன் மூலம் உடலுக்குத் தேவையான நோய் எதிர்ப்புச் சக்தி கிடைப்பதால் அலர்ஜி போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வாக அமையும்.

**ஆசிரியர்: வாழ்க்கைக்கு முக்கியமானது எது?**

**மாணவன்: வாய்**


**ஆசிரியர்: வாயா?**

**மாணவன்: பின்ன என்ன சார் சாப்பிடணும், பேசணும் இதற்கு வாய் அவசியம் தானே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூச்சுத் திணறல் ஏற்பட்டால் செய்ய வேண்டிய முதலுதவி!



மூச்சுத் திணறல் ஏற்படுகிறவர்களுக்கு 'ஹெய்ம்லீக் மேன்யூவா' என்னும் முதல் உதவியைச் செய்ய வேண்டும். மூச்சுத் திணறலுக்கு ஆளானவரின் பின்பக்கமாக நின்று அவரது விலா எலும்புகளுக்குக் கீழாக, அல்லது வயிற்றின் மத்தியில் இரண்டு கைகளாலும் உள்நோக்கி அழுத்தியவாறு மேலே தூக்க வேண்டும். இப்படிச் சில முறைகள் செய்ய வேண்டும். இதனால் வயிற்றுப் பகுதியில் இருந்து கிளம்பும் வாயு, தொண்டையில் சிக்கியுள்ள உணவை வாய் வழியாக வெளியே தள்ளி விடும்.




அந்நிலையிலேயே அவரைத் தூக்க முயற்சிப்பது போலச் செய்ய வேண்டும். அப்பொழுது சுவாசம் பாதையில் ஏதேனும் பாதிப்பு இருந்தால் நிவாரணம் கிடைக்கும்.

### ஒரு வயதுக்கும் குறைவான குழந்தைகளுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டால்?



குழந்தைகள் காசு, பட்டாணி என்று கண்டதையும் எடுத்து வாயில் போட்டுக் கொள்ளும். குழந்தைகளின் உணவுக் குழாய், மூச்சுக் குழாய் இரண்டுமே மிகவும் குறுகிய விட்டத்தில் இருக்கும். இதனால் இந்த மாதிரியான பொருட்கள் மிக எளிதாக மூச்சுக் குழாயை அடைத்துக் கொள்ளும். வாய்ப்பு உள்ளது.

குழந்தையின் மூச்சக் குழாய் அல்லது உணவுக் குழாயில் பொருட்கள் அடைத்துக் கொண்டால் பாதிக்கப்பட்ட குழந்தையை முன்பக்கம் குனிய வைத்து ஒரு கையால் தாங்கியபடி, ஒரு தோள்பட்டை எலும்புகளுக்கு இடையில் உள்ளங்கையின் அடிப்பாகத்தால் ஓங்கித் தட்ட வேண்டும். இப்படிச் சில தடவைகள் தட்டினால் தொண்டையில் சிக்கியுள்ள பொருள் வாய் வழியாக வெளியே வந்து விடும்.

பொதுவாக மூச்சுத் திணறலில் அவதிப்படுபவர்களுக்குக் குடிப்பதற்கு எதுவும் கொடுக்கக் கூடாது. அது தொந்தரவை அதிகப்படுத்தும்.

**அடுத்தவனுக்குக் கிடைத்து விட்டதே என்று மனிதன் பொறாமைப் படாத ஒரே விஷயம் "மரணம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணமாக்குதலின் வழிகளும் முறைகளும்

## ஆத்தும நோய்!

சென்ற இதழ் தொடர்ச்சி .....

நம்மில் அநேகருக்கு ஆத்துமாவின் உள்ளான "உள்ளான குணமாகுதல்" தேவை என்று நாம் யாவரும் ஒத்துக்கொள்வோம் என்று நினைக்கின்றேன். நமது மனம், நினைவுகள், ஞாபகங்கள், உணர்சிகள் எல்லாம் முழுமையாக சுகமாக்கப்படுவது தேவை. இதை நான் "ஆத்துமாவின் விடுதலை" என்கிறேன்.

**நாம் முழுமையாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார்:**

முழுமனிதனும் குணமாக்கப்படுவது படிப்படியாக நடைபெறுகிறது. இயேசுவை நம் இரட்சகராகவும் பரிசுத்த ஆவியானவரில் நமக்கு ஞானஸ்நானம் கொடுப்பவராகவும் ஏற்றுக்கொள்வதில் அது ஆரம்பிக்கிறது. ஒரு புதிய இருதயம், ஒரு விடுதலையுள்ள ஆவி அதன் விளைவாகிறது.

தேவன் எப்போதும் நமது உயிரின் மையத்தில் ஆரம்பிக்கிறார். அதாவது நமது ஆவியில் ஆரம்பிக்கிறார். முதலாவது நம்முடைய ஆவியை அவருடைய ஆவியால் தொடுகிறார். நமது ஆவி விடுவிக்கப்பட்ட பிறகு நமது ஆத்துமா தேற்றப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு மறுபடியும் கட்டப்படுகிறது.

கர்த்தர் நமது ஆவியில் (சில சமயங்களில் உள்ளான மனிதன், உள்ளுயிர் என்று அழைக்கப்படுகிறது. யோவான்7:37,38 "இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். 38. வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்".) ஆரம்பிக்கிறார். பிறகு நமது ஆத்துமாகளுக்குள்ளே அதைக் குணமாக்க கிரியை செய்து அதைத் தேற்றி, புதுப்பித்து மறுபடியும் கட்ட விரும்புகிறார்.

நமது ஆவி, ஆத்துமா, சரீரத்திற்கு அவருடைய ஜீவனையும், சுகமளிக்கும் வல்லமையையும் கொண்டு வந்து தர விரும்புகிறார். அவர் வரும் போது நாம் குற்றமற்றவர்களாக (சுகமும் முழுமையுமாக) இருக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்கிறார்.

**ஆவி, ஆத்துமா, சரீரம்: நமது சுகம்**

நாம் சொன்னது போல ஆவி, ஆத்துமா, சரீரத்தின் வேலைகள் யாவும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவை. ஒரு சுகமான "ஆவி" ஒரு சுகமான ஆத்துமாவின் உறுதியான அஸ்திபாரம். ஒரு சுகமுள்ள ஆவி, சுகமுள்ள சரீரத்தை ஆதரிக்கிறது. இது மாறியும் வேலை செய்யும், நாம் சரீரத்தில் அல்லது உணர்ச்சிகளில் நோயுள்ளவர்களாக இருந்தால் ஆவிக்குரிய பிரகாரமாக நாம் மிகச் சிறந்த நிலையிலிருப்பது கடினமாகும் நம் மனதிலோ, உடலிலோ வியாதியாய் இருந்தால் அது கர்த்தருக்காக நாம் செய்யும் வேலையையும் நமது சாட்சியையும் பாதிக்கக் கூடும். கர்த்தருடைய ஆவியானவரோடு நமக்குள்ள உறவு பாதுகாப்பானது. ஆனால் உலகத்திற்கு நமது வாழ்க்கையின் மூலமாக அவருடைய ஆவியானவர் பாய்ந்தோடுவது ஓரளவுக்கு மட்டுமே இருக்கக் கூடும்.

முழுமையானவைகளாகச் செயல்பட நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். யோவான் அப்போஸ்தலன் தன் நிருபங்கள் ஒன்றில் இந்த உண்மையைத் தான் குறிப்பிடுகிறார் என்று நம்புகிறேன். (3யோவான்2) "பிரியமானவனே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்''. இந்த வசனம் நம்முடைய சரீர சுகம், நம்முடைய ஆத்துமா சுகநிலையில் இருப்பதோடு சம்பந்தப்பட்டது என்று நமக்குப் போதிக்கிறது. மற்றொரு வகையில் சொல்லுவோமானால் ஒரு நல்ல சுகமான ஆத்தும ஜீவியம் ஒரு ஆரோக்கியமான சரீர ஜீவியத்திற்கு அவசியமாகும்.

**ஆவி, ஆத்துமா, சரீரம்: நமது குணமாகுதல்**

நமது சரீரங்கள், நமது ஆத்துமாக்கள் காட்டும் வழியைப் பின்பற்றுகின்றன. நமது ஆத்துமாக்கள் ஆவியின் வழியைப் பின்பற்றுகின்றன. ஆவிக்குரிய பிரச்சனைகள் உளவியல் ரீதியான மற்றும் உணர்ச்சி வசமான பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றது. இவை தொடர்ந்து சரீரப் பிரகாரமான பிரச்சனைகளை உண்டாக்குகிறது. நமது ஆவி, ஆத்துமா, சரீரத்துக்கிடையே உள்ள இணைப்புகள் உண்மையிலேயே ஒரு தொடர்ந்த சங்கிலியாக அமைகின்றன.

சரீரத்திற்குச் சிகிச்சை அளிப்பதன் மூலம் மட்டுமே ஒரு மனோதத்துவ ஆத்தும பிரச்சனையைத் தீர்த்துவிட முடியாது. அது போலவே ஒரு ஆவிக்குரிய பிரச்சனையை மனம் அல்லது உணர்ச்சிகளோடு உடன்படுத்துவது மூலம் மட்டுமே தீர்த்துவிட முடியாது. இதனால் தான் சில வைத்தியர் மற்றும் மனோதத்துவ நிபுணர் கொடுக்கும் சிகிச்சைகள் தோல்வியடைகின்றன. தனித்தனியாகவோ அல்லது சேர்ந்தோ ஆத்துமாவிலும் ஆவியிலும் பிரச்சனைகள் உண்டு பண்ணும் அடிப்படைக் காரணங்கள் வேரோடு நீக்கப்படுவதில்லை.

உடல் சம்பந்தப்பட்ட வியாதிகளுள்ள சிலருக்கு சுகமளிக்கும் ஜெபம் செய்யப்படும் போது கூட இது உண்மையாகிறது. ஜெபத்திற்குப் பிறகு அந்த நபர் சுகமடைந்தது போலக் காணப்படலாம். உடல் வலி, மற்ற உடலிலுள்ள அறிகுறிகள் கொஞ்சக் காலத்திற்கு மறைந்து விடலாம். ஆகிலும் ஆத்தும (உணர்வுகள்) மற்றும் ஆவி சம்பந்தப்பட்ட ஆழமான தேவைகள் சந்திக்கப்படாமலிருந்தால் சரீர சம்பந்தமான பிரச்சனைகள் மறுபடியும் தோன்றலாம்.

சுகமளிக்கும் சுவிசேஷகர்களின் ஊழியங்களில் இது நடப்பதை அநேக முறைகள் நான் பார்த்திருக்கின்றேன். அநேக மக்கள் முழுமையாக குணமாக்கப்பட்டு மறுபடியும் சரீர சம்பந்தமான பிரச்சனைகளினால் ஒருபோதும் துன்பப்படாமல் இருக்கிறார்கள். ஆம் நாம் நன்றாக இருப்பதை தேவன் விரும்புகின்றார். அவர் நாம் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் முழுமையாக இருக்க விரும்புகிறார். சுகமளிக்கும், குணமாக்கும் வேலை முழுமையாக இருக்க வேண்டும். உள்ளிருந்து புறத்திற்குப் போக வேண்டும். (ஆவியில் ஆரம்பித்து ஆத்துமாவில் தொடர்ந்து கடைசியில் சரீரத்தில் வெளிப்பட வேண்டும்.) இல்லாவிட்டால் மட்டுப்படுத்தப்பட்ட அரைகுறையான குணமாகுதல்தான் நடைபெறும். அது நீடிக்காது. இதனால் மனிதனுடைய ஆத்துமாவைச் சேதப்படுத்தும் காயங்களின் வகைகளைக் கண்டு கொள்ள வேண்டும்.

*மேய்ப்பனின் கோல்-*




**ஒருவர்: பொண்டாட்டி கண்ணுல தூசி விழுந்ததால எடுக்க 500ரூபாய் செலவாச்சு**

**மற்றவர்: நீங்க பரவாயில்லீங்க. என் பொண்டாட்டி கண்ணுல நெக்லஸ் விழுந்ததால 50,000 ரூபாய் செலவாச்சு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சி முதல்!

## அலர்ஜி



தலைவலி, காய்ச்சல், ஜலதோஷத்துக்கு அடுத்தபடியாக அடிக்கடி பலரை டென்ஷன் படுத்துவது அலர்ஜிதான்! யாருக்கு எது அலர்ஜி என்கிற 'வெரைட்டி'க்கு ஒரு முடிவே கிடையாது. பூச்சிக்கடி, உணவு, காஸ்மெடிக் அயிட்டங்கள், சூரிய வெளிச்சம் என்று அலர்ஜிக்கான காரணங்கள் அனுமார் வால் போல் நீண்டுகொண்டே போகிறது.

'அலர்ஜி வருவதற்கு காரணங்கள் எக்கச்சக்கம்! என்றாலும், அலர்ஜி உண்டாக இரண்டு காரணங்கள் தான் இருக்க முடியும். அதாவது, ஒன்று சீதோஷணம், மேக்கப் பொருட்கள், உடை, ஆயின்மென்ட், செல்லப் பிராணிகள், பூச்சிகள், தூசு முதலியவற்றால் வருவது! இதெல்லாம் உடம்புக்கு வெளியிலிருந்து வந்து அலர்ஜி ஏற்படுத்தும் ரகம். இரண்டாவது வகை சாப்பிட்ட உணவு, மருந்து அல்லது உடம்புக்குள் இருக்கும் பக்டீரியா அல்லது நாக்குப்பூச்சி போன்ற உடம்புக்கு உள்ளே இருக்கும் அயிட்டங்களால் வருவது!

'டாக்டர், எனக்கு உடம்பெல்லாம் கறுத்துப் போச்சு, அரிக்குது என்ன காரணம் என்றே தெரியவில்லை' என்று ஒரு பேஷன்ட் வந்து எதிரில் நின்றால், 'அவருக்கு எதனால் அலர்ஜி?' என்று கண்டுபிடிப்பதற்குச் சில நேரங்களில் டாக்டர்கள் ஷெர்லாக் ஹோம்ஸ் அளவுக்குத் துப்பறியும் வேலை செய்ய வேண்டி வரும்!

உதாரணமாக, ஒருவருக்குச் 'சாப்பிடும் உணவால் தான் அலர்ஜி' என்று டாக்டர் சந்தேகப்பட்டால், உப்பு, மிளகாய்ப் பொடி, தக்காளி, மீன் என்று உணவு அயிட்டங்களின் காரத்தை ஊசி மூலமாக கையில் ஒன்று மாற்றி ஒன்றாகத் 'துளியூண்டு' ஏற்றி, எந்த ஊசி போட்ட இடத்தில் தடிப்பு ஏற்படுகிறதோ, அதனால் தான் அவருக்கு அலர்ஜி என்று கண்டுபிடிப்பார்கள். ஆனால் முன்பெல்லாம் இந்த வழக்கம் கிடையாது.

விசித்திரமான அலர்ஜிகளோடு சிலர் என்னிடம் வருவார்கள். ஒரு முறை கிராமத்திலிருந்து ஒரு போஸ்ட்மென் வந்திருந்தார். "டாக்டர், எனக்கு சைக்கிளில் போனால் தோல் அரித்து, உடம்பு வீங்கிவிடுகிறது!" என்று சொன்னார். நானே ஒரு விநாடி ஆச்சரியத்தில் வாயைப் பிளந்துவிட்டேன்! பிறகு, அவரைப் பரிசோதனை செய்ததில் உடம்பில் வெயில்பட்டால் அவருக்கு அலர்ஜி வருகிறது என்று கண்டுபிடித்தேன்! அவர் வீட்டைவிட்டுக் கிளம்பினால் சைக்கிளில் தான் போவார். ஆகவே, சைக்கிள் மீது பழி! வெயிலில் இருந்து பாதுகாத்துக்கொள்ள அரைக் கை வைத்த சட்டை போடுவதற்கு பதிலாக, முழுக் கை சட்டையும் தலைக்குத் தொப்பியும் போடச் சொன்னேன். அவருக்கு அலர்ஜி நின்றுவிட்டது!

வெயில் என்று இல்லை, குளிர்ந்த காற்றுப்பட்டால்கூடச் சிலருக்கு அலர்ஜி வந்துவிடும். இங்கே வாசகர்களுக்கு ஒரு வார்த்தை, குளிர் காற்றுப்பட்டு உடம்பு வரவரப்பு ஆனாலோ, அல்லது உதடு வெடித்தாலோ, 'ஓகே! நமக்கு குளிர்காற்று அலர்ஜி இருக்கிறது' என்று பயப்பட வேண்டாம். இதை cold cream பயன்படுத்திச் சமாளித்துவிடலாம்! லிப்ஸ்டிக், சோப், சென்ட், குங்குமம் போன்ற அயிட்டங்கள் சிலருக்கு 'அலர்ஜி' ஏற்படுத்தும். இதில் 'ஹேர்-டை' மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய விஷயம். கையில் லேசாக அதைத் தடவிப் பார்த்துவிட்டு நமக்கு இது 'அலர்ஜி' ஏற்படுத்தாது என்று ஊர்ஜிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துகொண்ட பிறகுதான் தலைமுடியிலோ மீசையிலோ தடவ வேண்டும். இல்லையென்றால், சிலருக்குத் தோல் வெளுத்துப் போகும் அளவுக்குக்கூட இது பாதிப்பை ஏற்படுத்திவிடும்! அதே மாதிரி சிலருக்கு பவுடர், அதிலும் சந்தனப் பவுடர் நிறைய அலர்ஜியை உண்டுபண்ணும். இதுபற்றி மேலே சொல்லிக்கொண்டே போவதற்குமுன் அலர்ஜி வந்தால் என்னவாகும் என்று சொல்லிவிடுகிறேன். அலர்ஜியின் ஆரம்பத்தில் அரிக்கும். சிலசமயம் தோல் கறுத்துப் போகும். இது மிதமான அலர்ஜி. அதாவது ஆரம்ப கட்டம். இதை வளரவிட்டால் அலர்ஜியால் பாதிக்கப்பட்ட இடம் சிவந்து போகும். சிலருக்குக் கொப்பளங்கள் கூட வந்துவிடும். அலர்ஜியில் மூன்றாவது கட்டமும் இருக்கிறது. இந்தக் கட்டத்தில் அலர்ஜி வந்த இடத்தில் நீர் கோத்துக்கொண்டு வடியவே ஆரம்பித்துவிடும். ஓகே! இப்போது ஒரிஜினல் டிராக்குக்குப் போகலாம். சிலருக்கு கம்பளி, டெர்லின், நைலான் போன்ற ஆடைகளை அணிந்தால் உடம்பு அரிக்க ஆரம்பித்துவிடும். யாருக்கும் அலர்ஜி ஏற்படுத்தாத ஒரே ஆடை நமது கதர் ஆடையும் கைத்தறி ஆடையும் தான்.

சிலருக்குத் தங்க நகைகளால் கூட அலர்ஜி ஏற்படும்! என்னுடைய பேஷன்ட் ஒருவர் – அவர் அரசியல் குடும்பத்தைச் சேர்ந்தவர். அதனால் பெயர் வேண்டாம். அவருக்குத் தங்க நகை என்றால் உயிர். ஆனால், கம்மல், மூக்குத்தி கூடப் போட முடியாது. மீறிப் போட்டால் அரிப்பு, வீக்கம் எல்லாம் வந்துவிடும். இதுபோன்ற பிரச்சனை உள்ளவர்கள் கம்மலோ, மூக்குத்தியோ உடம்போடு உரசும் பாகத்தில் மட்டும் வெள்ளி முலாம் பூசித் தங்கநகைகளை அணிய முயற்சி செய்து பார்க்கலாம். அடுத்தது, செல்லப் பிராணிகளால் வரும் அலர்ஜி! இதில் பிரதானமானது பூனை! பூனை முடி பட்டால் சிலருக்கு உடம்பெல்லாம் தடித்துவிடும். இவர்கள் பூனையை எடுத்து மடியில் வைத்துக் கொஞ்ச வேண்டும் என்று கூட அவசியம் இல்லை! பூனை நடமாடிய இடத்தில் இவர்கள் போய் உட்கார்ந்தால் கூட இவர்களுக்கு உடம்பெல்லாம் அரிக்க ஆரம்பித்துவிடும். நாய், பச்சைக்கிளி இதெல்லாம்கூட சிலருக்கு அலர்ஜியை ஏற்படுத்தும். இன்னும் சிலருக்கு பூவினால்கூட அலர்ஜி வரும். இவர்கள் முழம் முழமாகப் பூவை வாங்கித் தலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது இல்லை. வசந்த காலங்களில் விடிவதற்கு முன் மரங்கள் நிறைந்த இடத்தில் வாக்கிங் போனாலே போதும் பூக்களின் மகரந்தம் காற்றின் வழியாக வந்து இவர்களுக்கு அலர்ஜியை ஏற்படுத்திவிடும்.

**அடுத்தது - டஸ்ட் அலர்ஜி!**

பூனை முடி, நாய் முடி, தவிர சிலந்தி, கரப்பான், ஈ, எலி, மூஞ்சூறு போன்றவற்றின் எச்சங்கள் பலருக்கு அலர்ஜியை ஏற்படுத்தும். தூசு பூச்சி (Dust Mite) என்று ஒரு பூச்சி இருக்கிறது. மில்லி மீட்டரில் மூன்றில் ஒரு பங்கு நீளம்தான் இருக்கும். இது கடிக்காது. என்றாலும், நமது பாய், தலையணை, மெத்தை போன்ற இடங்களில் இது மறைந்து கொண்டு சிலருக்கு அலர்ஜியை உண்டு பண்ணும். வாக்குவாதம் கிளீனரால் கூட இதை வெளியேற்ற முடியாது. இதிலிருந்து விடுபட ஒரே வழி வாரம் ஒரு முறை எல்லா தலையணை உறை மற்றும் படுக்கை உறையையும் பெட்ஷீட்டையும் சோப் போட்டு துவைப்பது தான்.

கடைசியாக, நாம் சாப்பிடும் மாத்திரை மருந்துகளே அலர்ஜி ஏற்படுத்தி உயிருக்கே உலைவைக்கும் அளவுக்குக்கூடக் கொண்டுபோய் விடும்! பென்சிலின், வலி நிவாரணிகள், ரத்த அழுத்தத்துக்காக சாப்பிடும் மாத்திரைகள் என்று சில மருந்துகள் பொதுவாகச் சிலருக்கு ஒப்புக்கொள்வதில்லை! இது மாதிரி அலர்ஜியிலிருந்து தப்பிக்க ஒரே வழி – புது டாக்டரிடம் போகும்போது, நமக்கு என்ன என்ன மருந்து என்றால் அலர்ஜி என்று நம் அனுபவத்தை வைத்து நாமே சொல்லிவிடுவதுதான்! எதனால் அலர்ஜி வந்தாலும் அதை டாக்டரிடம் காட்டிக் குணப்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், அதைவிட சிறந்த நிவாரணம், நமக்கு எது அலர்ஜி என்று மிகச் சரியாகத் தெரிந்து கொண்டு அதன் அருகிலேயே போகாமல் இருந்து விடுவதுதான்.

*அடுத்த இதழில் ரோமம்*

*நன்றி விகடன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படித்ததில் பிடித்தவை

## சுத்தமும் அழகும்!

நண்பன் ஒருவர் தனது வீட்டை மிகவும் சுத்தமாக வைத்திருக்கின்றார். அவருடைய வீட்டிற்கு வருபவர்கள் யாரும் ஏதும் அங்கே சுத்தமில்லாத எதையும் காணமுடியாது. அதனால் வீட்டை சுத்தமாக வைத்திருப்பவர் என்ற நல்ல சாட்சி அவருக்கு உண்டு. ஆனால் அதன் நிமித்தம் யாருக்கும் எந்த பயனுமில்லை. அது யாரையும் திருப்திப்படுத்தாது. ஏனென்றால் அந்த நண்பன் மிகவும் சிக்கனமானவர். அவசியமான பொருளைக் கூட வாங்கமாட்டார். ஒரு கஞ்சல் தன்மையுடையவர். ஒரு அழகுப் பொருள் அந்த வீட்டில் கிடையாது. ஜன்னல் கதவுகளுக்கு ஒரு கேட்டின் ஸ்கீரீன் கிடையாது. இதனால் அங்கு எந்த அழகும் யாரையும் கவர்ந்திட முடியாது.

ஆம் அது சுத்தமான வீடு. ஆனால் அது அழகான வீடு அல்ல. சில மனிதர்களைப் பார்க்கும் போது அவர்கள் மிகவும் சுத்தமானவர்கள். அவர்களில் யாரும் எந்தக் குறையும் காணமுடியாதபடி அவர்கள் காணப்படுவார்கள். அவர்கள் வாழ்விலும் எந்தக் குற்றமும் தவறும் காணப்படாது. ஆனால் யாரும் தவறுகள் செய்தால் அதை பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். அவர்களை நேரடியாகவே விமர்சித்து அதைப் பெரிதுபடுத்தி அவர்களுடன் பேசிப் பழகுவதையே விட்டுவிடுவது மட்டுமல்ல அவர்களை ஓரம் கட்டவிடுவார்கள்.

இவ்வகையானவர்கள் சுத்தமானவர்களாக இருந்தாலும் அவர்கள் அழகானவர்கள் அல்ல. ஏனெனில் அவர்களின் அன்பான செயல்களை யாரும் பார்க்கவில்லை. அவர்கள் மற்றவர்களை சந்தோஷப்படுத்தும் செயல்களை யாரும் காணவில்லை. இவர்களிடம் தயவான சிந்தையுண்டு என்று யாருக்கும் தெரியாது. இவர்களிடம் தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் பிறரை மன்னித்து வாழ்வழிக்கும் பண்புகள் எதுவும் இருப்பதை எவரும் காணமுடியவில்லை.


இப்படியாக வாழும் மனிதர்களில் நல்ல பக்தியான வாழ்க்கை முறையுண்டு. அவர்களுடைய ஆன்மீக வாழ்வென்னும் வஸ்திரத்தில் எந்தக் கறையும் இருக்காது. ஆனால் அந்த வஸ்திரத்தில் எந்த நிறமோ சித்திர வேலைப்பாடுகளோ இல்லை. அதனால் அது யாரையும் கவராது. யாரும் அதை அதிகமாக விரும்பமாட்டார்கள். அதேபோல வெறும் கறைகளில்லாத வாழ்வு வாழ்வது மட்டுமல்ல அந்த வாழ்வு மற்றவர்களுக்கும் பயன் தரும் வண்ணமாய் அமைய வேண்டும். ஒரு மரம் கெட்ட கனிகளை கொடுக்கவில்லை என்பது மட்டுமல்ல அதில் நல்ல கனிகள் ஏராளமாக இருப்பதையே எல்லோரும் விரும்புவர்.

ஆன்மீக வாழ்வு என்பதும் கறை திரையில்லாத வாழ்வு மட்டுமல்ல அது பிறருடைய நலன் கருதி வாழும் வாழ்வாகும். இவ்வகையான வாழ்வை நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்து நமக்கு ஒரு மாதிரியை காண்பித்திருக்கின்றார். நாம் அவர் வழியில் நடப்போம்.

நன்றி ஜீவநீரோடை
தொகுப்பு: ஏழாலையூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொகுசான வாழ்க்கை!



தமிழில் சினிமாப்படங்கள் வந்து ஜனங்கள் மத்தியில் பிரபலமாக துவக்க நாட்களில் தமிழ் திரையுலகில் சூப்பர் ஸ்டார் அந்தஸ்தில் இருந்தவர் தியாகராஜ பாகவதர். அவருடைய தலைமுடி ஸ்டைலின் தாக்கம் இன்றும் தொடர்கின்றது. அவர் பாடிய பாடல்களை இன்றும் அநேகர் ரசிக்கின்றனர் அவர் சுகபோகமாக வாழ்ந்தவர். காம்புகள் நீக்கப்பட்ட மலர்களை படுக்கையில் விரித்து அவற்றின் மேல்தான் உறங்குவார். பன்னீரில்தான் வாய் கழுவுவார். பல பெண்களோடு இணைந்து பேசப் படடவர் மிக ஆடம்பரமாக வாழ்க்கை வாழ்ந்தவர். ஆனால் இலட்சுமி காந்தன் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு சிறைவாசம் அனுபவித்தார். சிறையிலிருந்து வந்த பின்பு புஷ்பக்கட்டிலில் படுத்து தூங்கிய சுப்பர் ஸ்டார் மனிதன் கயிற்று கட்டலில் தான் மரிக்கும் வரை நித்திரை செய்தார்.

பட்டம் மிக உயரம் உயரமாக பறக்கும். ஏதோ ஒன்று அதனுடைய நூலை வெட்டிவிட்டதென்றால் எங்கோ போய் விழுந்துவிடும். வாழ்க்கை சூழ்நிலைகள் நிரந்தர மற்றவை. உலகத்தின் மிக முக்கிய பணக்காரர்களில் ஒருவராக எண்ணப்பட்டவர் பலர் கடன் மேல் கடன் பட்டு பிச்சைக்கார நிலைக்கு வந்து வாழ்வை முடித்திருக் கின்றனர். இன்று போல என்றும் இருக்கும் என்று யாரும் கூற முடியாது. பரிசுத்த வேதாகமத்தில் ஒரு அருமையான வார்த்தை உண்டு. நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் வாழ்வு எப்படிப்பட்டது? கொஞ்சக் காலம் தோன்றி பின்பு தோன்றாமல் போகின்ற புகையைப் போலி ருக்கிறது. ஆதலால் இறைவனுக்குச் சித்தமானால் நாங்களும் உயிரோ டிருந்தால் இன்னின் னதைச் செய்வோம் என்று சொல்ல வேண்டும். (யாக் கோபு 4:14-15). எனவே நமக்கு அமைகின்ற சூழ் நிலைகளின் அடிப்படையில் நாம் அமைக்காமல், எல்லா சூழ் நிலைகளிலும் அசையாதிருக்கத் தக்கதான சரியான ஒரு வாழ்க்கைக் கொள்கையை கொண்டிருக்க வேண்டும். ஆபிரகாம் என்ற ஒரு தேவ மனிதன் செல்வ சீமானாக அந் நாட்களில் வாழ்ந்த போதிலும் அவருடைய வாழ்வு இந்த உலகத் தைச் சார்ந்ததான ஒரு சொகுசான வாழ்க்கையாக இருக்கவில்லை. வேதம் கூறுகிறது அவர்கள் இவ்வுலகில் ஒரு பரதேசியான வாழ்வு வாழ்ந்தார்கள். அதாவது இந்த பூமிக்குரிய வாழ்வு ஒரு நிரந்தரமல்ல என்பதை நன்கு அறிந்திருந்தார்கள். அதை அவர்கள் தங்கள் கண்களால் காணமுடியா விட்டாலும் அதை விசுவாசித்தார்க்ள். ஆகையால் இறைவன் அவர்களுடைய இறைவன் என்று சொல்வதற்கு வெட்கப் படவில்லை என்று எழுதப்பட்டுள்ளது.

இன்று சொகுசான வாழ்க்கை வாழ்பவர்களின் பட்டியலில் பல ஆன்மீக காரியங்களில் ஈடுபடுகிற வர்கள் காணப்படுகின்றனர். அதனை அவர்கள் இறைவனுடைய ஆசீர் வாதம் என்று கூறிக் கொள்வார்கள். அவர்கள் ஆபிரகாமுடைய வாழ்க்கை முறையை கவனிக்க அதை அறிந்து கொள்ள மனதில்லாதவர்களாய் இருப்பதே அதற்கு காரணம். "பரிசுத்தமானவர்களை கண்கள் பார்த்துக் கொண்டிருந்தால் பாவமானவைகளில் கால்கள் சிக்குவதில்லை"

நன்றி ஜீவநீரோடை
தொகுப்பு: ஏழாலையூரான்

**யாருக்காகவும் உன்னை மாற்றிக் கொள்ளாதே, ஆனால் உனக்காக தன்னையையே மாற்றிக் கொள்பவர் கிடைத்தால் அவர்களைத் தொலைத்து விடாதே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயக்கண்ணோட்டம்

## "குரு"  யார்?

சென்ற இதழ் தொடர்ச்சி...

திருமூலர் எட்டுக் குருமார்களைச் சுட்டிக் காட்டுகிறார்.

நான்கு நந்திகள் - நான்கு திசைகளுக்கு
சிவயோக மாமுனிவர்
பதஞ்சலி முனிவர்
வியாக்கிரபாத முனிவர்
திருமூலர் ஆகியோர்.

ஆயினும் 6ம் தந்திரம் 1576ம் பாடலில்

எல்லா உலகுக்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்
எல்லோரும் உய்யக் கொண்டிங்கே யிருத்தலால்
சொல்லார்ந்த நற்குரு சுத்த சிவமே – என்கிறார்

மேலும், தன்னையும் ஒரு குரு என்று சொன்ன திருமூலர் தானே ஒரு குருவைத் தேடுவதாகவும் சொல்லியிருப்பது சிந்தனைக்குரியது.

தேடுகின்றேன் திசை யெட்டோ ரிரண்டையும்
நாடுகின்றேன் நலமே யுடையானடி
பாடுகின்றேன் பரமெ துணையா மெனக்
கூடுகின்றேன் குறையா மனத்தாலே

என்ற பாடலில் குருவை பதினாறு திசைகளிலும் தேடுவதாகவும், நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிகின்ற குருவின் பாதங்களை நாடுவதாகவும், பரத்திலிருக்கின்ற இறைவனாகிய குருவைப் பாடுவதாகவும், தன் குறைவான மன நிலையிலும் அக்குருவைக் கூடுவதாகவும் சொல்லுகிறார்.

மாசில்லாத அன்பாகிய சுத்த சிவத்தை வழிபட்டு உய்யும் முறையைக் காண்பிக்கக் கூடிய குருவை வழிபட்டால் பயனடையக் கூடும் என்று கீழ்க்காணும் பாடலில் சொல்கிறார்.

சிவனை வழிபட்டார் எண்ணிலி தேவர்கள்
அவனை வழிபட்டுங் காமாறொன்றில்லை
அவனை வழிபட்டுங் காமாறு காட்டும்
குருவை வழிபடில் கூடலுமாமே

மெய் குருவைத் தேட மற்றோரு குருவின் துணை தேவையாயிருக்கிறது. மனிதன் குரு அல்ல. அப்படியானால் இந்தக் குரு யார்?

மருவன்றியே நின்ற மாயப் பிரானைக்
குருவன்றியார்க்கும் கூட வொண்ணாதே

என்ற திருமூலரின் வரிகள் அதை மெய்ப்பிக்கின்றன!

குருவை அறிந்து கொள்ளும் பொறுப்பைத் திருமூலர் சிலேடையாக நம்மிடம் சொல்கிறார். அவர் ஏன் தன் கருத்துக்களை நேரிடையாகச் சொல்லாமல் மறைமுகமாகவே சொல்கிறார் என்பது சிந்தனைக்குரியது. ஒரு வேளை ஆரியரின் ஆதிக்கம் அவரை அப்படி எழுத வைத்திருக்கலாமோ என்னவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கட்டுண்ட கள்வன் தானோ கட்டினை விட்டுக் கொள்வான்
விட்ட வேதனையைத் தீர்க்க விடுவிப்பான் ஒருவன் வேண்டும்
அட்டமா சித்திகளைக் காலறிவினால் அறியலாகும்
தட்டறப் பாசம் தீர்க்கத் தற்பர குருவே வேண்டும்."

"விண்ணின்றிழிந்து வினைக் கீடாய் மெய் கொண்டு
துண்ணின்ற தாளைத் தலைக் காவல் மேல் வைத்து
உண்ணின்றுருக்கியோர் ஒப்பில்லா ஆனந்தக்
கண் கொண்டு காட்டிக் களிம்பறுத்தானே."

"நீரிலே முளைத் தெழுந்த தாமரையின் ஓரிலை
நீரிலே நின்றவாறும் நீரில்லாதவாறு போல்
பாரிலே முளைத் தெழுந்தப் பண்டிதப் பராபரன்
பாரினோடு கூடி நின்ற பண்பு கண்டிருப்பீரே"

பாவக்கட்டிலிருந்து மனிதன் தன்னைத் தானே விடுவித்துக் கொள்ள இயலாது. அவனை விடுவிக்க வேறொருவர் வேண்டும். அவர் வானத்திலிருந்து இறங்கி வருவார். மனிதனைப் போன்ற சரீரத்துடன் வருவார். அச்சரீரத்தை மனிதனை மீட்கும் பொருளாக ஈடு கொடுப்பார். மனித உள்ளத்தை உருக்கச் செய்வார். அவனுடைய வாழ்க்கைக்கு முன் மாதிரியாகத் தன்னுடைய ஒப்பற்ற பாத அடிச் சுவடுகளை விட்டுச் செல்வார். பாவிகள் நிறைந்த உலகத்திலிருந்தாலும் அவரிடத்தில் பாவம் இருக்காது என்ற கருத்தைத் தெரிவிக்கும் திரு மூலரின் மூன்று அருமையான பாடல்களை வியக்காமலிருக்க இயலாது.

மேலும் திருமந்திரம் 6:1578ல்

"சுத்த சிவன் குருவாய் வந்து தூய்மை செய்
தத்தனை நல் கருள் காணா அதிமூடர்
பொய்த்தகு கண்ணான் நமர் என்பர், புண்ணியர்
அத்தன் இவன் என்றடி பணிவாரே." என்று

காணப்படுகிறது. இதன் பொருள் என்னவெனில் இறைவன் பரிசுத்த குருவாக இவ்வுலகில் தோன்றி தம்மை வெளிப்படுத்துவார். இதை அறியாத மூடர்கள் அவரைச் சாதாரண மனிதன் என்பார்கள். பக்தர்களோ வெனில் அவரையே இறைவனாகக் கண்டு வணங்குவார்கள் என்பதே.

இனி கௌதமர் கூறும் குருவைக் குறித்துக் காண்போம்.

"சற்குருவின் பெருமைதன்னை உலகு தன்னில்
தானறியச் சாற்றுகின்றோம் சார்ந்து கேளும்
சற்குருவாய் எவ்வுயிர்க்குத் தானே தானாய்ச்
சகல சீவ ஆன்மாவின் குருவுமாகிச்
சற்குருவே பேரொளியாய் நின்றசோதி
தாரணியில் மானிடத்தின் சட்டை சாற்றிப்
சொற்குருக்கள் தங்களுக்குச் சீடன் போலாய்ப்
புத்திமதி சொல்லியே புரிவோர் தாமே"

ஓவ்வொரு ஜீவாத்துமாவிற்கும் இறைவனே சற்குருவாக இருப்பாராம். இவர் சாதாரண மனிதனைப் போல அவதாரமாகி உலகில் வருவாராம். இவர் ஜோதியாகத் தம்மை வெளிப்படுத்துவாராம். உலகின் கண் உள்ள மனிதர்களுக்குப் பணிபுரிய சீடன் போலத் தன்னைத் தாழ்தி, அத்துடன் மக்களுக்குப் புத்திமதிகளையும் கூறுவாராம். இப்படிப்பட்ட குரு யார்?

மேலும் கௌதம விருத்தம் கூறுகிறது.

தொடரும்

**நன்றி சாது செல்லப்பா —**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீதப் பார்வை

# 2ம் சங்கீதம்

ஒரு கேள்வியோடு கூட சங்கீதத்தை ஆரம்பிக்கிறார். பல நூற்றாண்டுகளுக்கு முன்னேயும் ஜாதிகள் கொந்தளித்தும், ஜனங்கள் விருதாவாக, தேவையற்ற, நடக்க முடியாத காரியங்களைச் சிந்தித்தார்களாம். அதுபோலவே இன்றைக்கும் இப்படிப்பட்ட நிலையில் பலஜாதிகள் கொந்தளித்து எழும்பியிருக்கிறார்கள். விருதாவான காரியத்தையும் சிந்திக்கிறார்கள்.

கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனை பண்ணினார்கள்.

அந்நாளில் ஆட்சி செய்த ராஜாக்கள் கர்த்தருக்கு விரோதமாகவும் அவரால் அபிஷேகம் பண்ணினவர்களுக்கு விரோதமாகவும், ஆலோசனை பண்ணினது போல சில நாடுகளில் அதின் ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் ஏகமாய் ஒரு மனதாய் ஆலோசனை பண்ணுவார்களாம்.

எதற்கு ஆலோசனை தேவஜனங்களுக்கு விரோதமாக தீங்கு செய்வதற்கு. நமது நாட்டில் நாம் சமாதானத்தோடு வாழ்கிறோம். ஆனால் சில நாடுகளில் தேவனைக் கூடித் தொழுது கொள்ள முடியாத நிலையில் உள்ள நாடுகளும் உண்டு. அவர்கள் எண்ணம் தேவனைத் தொழுது கொள்ளக்கூடாது என்கிறது.

பரலோக தேவன் இவர்கள் செய்கிற காரியங்களைக் கண்டு நகைப்பாரா வல்லமை பொருந்திய தேவன். பூகம்பம், பூமி அதிர்ச்சி வருகிறது வருவதை யார் தடுக்க முடியும்? சுனாமி வருகிறது யார் தடுக்க முடியும்? வருவதை அறியலாம். வருவதைத் தடுக்க முடியாது. புயல் காற்று வருகிறது, கொள்ளை நோய் வருகிறது வந்தபின் அதற்குப் பரிகாரங்களை நாம் செய்யலாம். வருவதை யாரும் தடை செய்ய முடியாது. அவருடைய இயற்கையையே நம்மால் ஒன்றும் செய்ய முடியாதிருக்க அவரை என்ன செய்ய முடியும்? அதை நினைத்து அவர் நகைப்பாராம்.

வேதத்தில் இப்படிப்பட்ட காரியத்தைக் காணலாம். இஸ்ரவேலரைத் துரத்தி வந்த பார்வோனையும் அவன் சேனையையும் கர்த்தர் கலங்கப் பண்ணினார். கிழக்கு வெளுத்துவரும் ஜாமத்தில் கர்த்தர் அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து எகிப்தியரின் சேனையைப் பார்த்து, அவர்கள் சேனையை கலங்கடித்து அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழலவும் அவர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும் பண்ணினார். அப்பொழுது எகிப்தியர் இஸ்ரவேலரை விட்டு ஓடிப்போவோம், கர்த்தர் அவர்களுக்கு துணை நின்று எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம் பண்ணுகிறார் என்றார்கள். (யாத்.14:24,25) அதே தேவன் இன்றைக்கும் ஜீவிக்கிறார் பழைய ஏற்பாட்டில் தேசத்தைச் சுதந்தரிக்க அப்படி நடத்தினார். இப்பொழுதோ அப்படிப்பட்டவர்களும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்புகிறார்.

தொடர்ந்து சங்கீதங்களிலும் வேதம் முழுவதும் பல இடங்களில் கூறப்பட்டுள்ளதால் சீயோனைக் குறித்து சில காரியங்களை எழுத விரும்புகிறேன். இஸ்ரவேல் ஜனங்களும் எகிப்திலிருந்து வரும்பொழுது, எமோரியருடைய ராஜாக்களுடைய தேசத்தை சுதந்தரித்தார்கள். அது சீயோன் மலை வரை இருந்தது. (உபா.4:46-49) தாவீதின் காலத்தில் எபேசியரிடம் சீயோன் கோட்டை இருந்தது. அதை தாவீது பிடித்து தாவீதின் நகரம் என பெயரிட்டார். அது எருசலேமில் இருந்தது. அங்கிருந்து தாவீது ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். அந்த எருசலேமையும், அதிலுள்ள சீயோனையும் தேவன் தெரிந்து கொண்டார். எருசலேம், சீயோன், தேவனுடைய நகரம். அங்கே அவருடைய உடன்படிக்கை பெட்டி இருந்தது. சாலமோன் ராஜா அங்கு தான் தேவனுக்கு ஆலயத்தைக் கட்டினான்.

அந்த சீயோனில் தேவன் தாவீதை ராஜாவாக ஏற்படுத்தினார். அங்கு தேவன் வாசம் செய்தார். தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரவேல் ஜனத்தை கர்த்தர் நேசித்தார். அவர்கள் சீயோன் குமாரத்திகள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் தேவனுடைய கற்பனைகளின்படி நீதியாய், அவர் விரும்புவது போல விரும்பினார். அவர்களோ புறஜாதியாரைப் போல விக்கிரக ஆராதனைக்கு சென்று, தேவனை விட்டு விட்டதால் பாபிலோனியரால் சிறைபிடிக்கப்பட்டுப் போனார்கள், பின்னர் தேவன் அவர்களுக்கு அந்த தேசத்தைக் கொடுத்தார். அது இஸ்ரவேல் தேசமாகும். ஏசாயா 2:3ல் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும் என்று ஏசாயா தீர்க்கதரிசி முன்னதாக உரைத்தார்.

ஏசாயா 9:6ல் நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளிலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும் என்றும் தீர்க்கதரிசனம் உரைத்தார். வானத்தையும், பூமியையும் உண்டாக்கின தேவன் அந்த எருசலேமில் சீயோனில், பெத்லேகேமில் பிறந்தார். ஏசாயா சொன்னதின்படியே கர்த்தருடைய வசனம் வெளிப்பட்டது. ஆண்டவராகிய இயேசு பூமிக்கு வருமுன் கொடுக்கப்பட்டது. மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட வேதம் அது பழைய ஏற்பாடு. ஆண்டவர் இயேசு வந்த பின்பாகக் கொடுக்கப்பட்டது புதிய ஏற்பாடு. இந்த வேதம் தான் நம் கைகளில் உள்ளது.

ஆண்டவர் இயேசு வந்தார். நம் பாவத்திற்குப் பிராயச்சித்தமாக அவர் மரித்தார். மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். பின்னர் 40 நாட்கள் கழித்து பரலோகம் சென்றார். பரலோகம் சென்ற ஆண்டவர் விரைவில் வர இருக்கிறார். அவர் வந்து இறங்கப்போவது அந்த எருசலேம் சீயோனிலே தான். வேதம் எதற்குக் கொடுக்கப்பட்டது. அதை வாசித்துத் தியானித்து அவருடைய கற்பனைகளின்படி நடப்பதற்கே, எருசலேமிலுள்ள தேவ ஜனத்தைத் தேவன் சீயோன் குமாரத்திகளாக (ஆண், பெண் இருவருமே) தேவன் தெரிந்து கொண்டாரோ அது போலவே ஆண்டவராகிய இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும் சீயோன் குமாரத்திகளே.

எருசலேமிலுள்ள சீயோனுக்குச் செல்லுகிறோமோ இல்லையோ அவருக்கு உகந்த பரிசுத்த ஜனமாய் வாழும்பொழுது அவருடைய வருகையில் அவரோடு கூட பரம சீயோனை அடைவோம். இந்த சீயோனைப் பார்க்க முடியவில்லையே என்று கவலைப்பட வேண்டாம். சரியாக வாழாமல் இந்த சீயோனைப் பார்த்துவிட்டு வந்ததினால் அந்த பரம சீயோன் போகமுடியாது. பரம சீயோன் செல்ல பரிசுத்தமாய் வாழ்ந்தால் அவருடைய வருகையை அறியலாம்.

தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன், கர்த்தர் என்னை நோக்கி நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்பதினாலே ஆண்டவர் உண்டாக்கப்பட்டவர் என்று யெகோவா சாட்சிக்காரர்கள் கூறி விசுவாசிகளை திசைதிருப்புகிறார்கள். அவர்களிடம் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். ஆண்டவர் இயேசு 2000 வருடத்திற்கு முன் தேவனால் ஜெநிக்கப்பட்டவர், தேவன் வேறு, அவர் அவரைவிட குறைந்தவர் என்றும் கூறுவார்கள். தேவன் ஒருவரே, அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாக திரித்துவ நிலையில் உள்ளார். அவராலேயே உலகம் உண்டானது. ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாய் இருந்தது. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவராலேயல்லாமல் உண்டாக வில்லை.

வார்த்தையான தேவன் நம் பாவங்களைப் போக்க, மாம்சத்தில் இயேசு என்ற பெயரில் அவதரித்தார். மனுஷீகத்தில் அவர் வெளிப்பட்ட படியினாலே, மனுஷகுமாரனென்றும், தேவகுமாரன் என்றும் அழைக் கப்பட்டார். ஆண்டவர் இயேசு சொன்னார். நானும் பிதாவும் ஒன்றா யிருக்கிறோம். என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று கூறினார். இயேசு தன்னை ஆண்டவர் என்று சொன்னாரோ என்று கேள்வி கேட்பவர்கள் உண்டு. மத்தேயு 21:3ல் இரண்டு பேரை அனுப்பி ஒரு கழுதையையும், அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண் பீர்கள், அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டு வாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால்: இவைகள் ஆண்ட வருக்கு வேண்டுமென்று சொல்லு ங்கள் என்றார். மத்தேயு 22:45ல் தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார். வசனம் மத்தேயு 22:42-45 படித்துப் பாருங்கள். அவரோடே பரம சீயோனை அடைய முடியும். என்னை ஆண்டவரே! ஆண்டவரே என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறது என்ன? (லூக்கா 6:46). நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர் தான். யோவான் 13:13 மற்றும் பல இடங்களிலும் உண்டு. ஆண்டவரே என்று அழைத்த ஒருவரையும் அப்படி கூப்பிடாதீர்கள் என்று எங்கும் ஆண்டவர் கூற வில்லை. அவர் தேவாதி தேவன்.

அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்து கொள்வதற்கு தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்திய முள்ளவருக்குள்ளும் இருக்கிறோம். இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார். 1 யோவான் 5:20. ஆக நமது தேவன் பிதா குமாரன் பரிசுத்த ஆவியாக இருக்கிறார். பிதா தேவன், குமாரன் தேவன், பரிசுத்த ஆவி தேவன். ஆனால் அவர் ஒருவரே. நமது மூளையால் இதற்கு மேல் அறிய முடியாது. நாம் ஆவி, ஆத்துமா, சரீரத்தை உடையவர்கள். ஒரே ஆள்தான் நாம். 3 தன்மைகள் நமக்குள் உண்டு. அவர் தேவன் திரித்துவமுள்ளவர். வேதம் கூறுவதை நம்புவோம். அவர் வேதத்தில் கூறியதுபோல இரட்சி ப்பை பெற்றுள்ளோம். அபிஷே கத்தைப் பெற்றுள்ளோம், விடுதலை யைப் பெற்றுள்ளோம். எந்த நாமத்தில் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில், பின் ஏன் சந்தேகம்? அப்படி யாராவது ஆண்டவராகிய இயேசுவை குறைத்துப் பேசுவார் களேயானால் "ஒருவன் உன்னி டத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளா மலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனுமாய் இருக்கிறான் என்று கூறப்பட்டுள்ளது (2யோவான் 10,11) மேலும், யெகோவா சாட்சி களைக் குறித்து அறிய எனது நண்பர் பாஸ்டர் சாமுவேல் தினகரன் அவர்கள் எழுதியுள்ள யெகோவா சாட்சிகள் உண்மையா? என்ற புத்தகத்தை வாங்கிப் படியுங்கள்.

ஆண்டவர் இயேசு எல்லா மக்களுடைய பாவங்களுக்காகவும் மரித்தார், உயிர்த்தார். ஜாதிகளை சுதந்தரமாகத் தருவார் என்ற வாக்குத்தத்தத்தின்படி உலகின் பல நாடுகளிலுள்ள பலவிதமான ஜாதி ஜாதியான மக்களும் இரட்சிக்கப் பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஏசாயா 53:12ல் கூறியுள்ளபடி அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத் திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேக ருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதின் நிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாக பங்கிட்டுக் கொள்வார் என்ற வசனத்தின்படி ஒவ்வொரு நாட்டிலும் தினமும் ஆயிரக் கணக்கானோர் இரட்சிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி குயக்கலத்தைப் போல் அவர்களை உடைத்துப் போடுவீர் என்று சொன்னார்.

யாரை? இடர் செய்கிறவனை, துணிகரமாய் தன் பாவத்தில் வாழ்கிறவனை, அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் "தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன்" சகாயமின்றி சடிதியில் நாசமடைவான். (நீதி.29:1) துணிகரமாக பாவம் செய்கிறவன் அவனாகவே அழிந்து போவான். தேவன் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. துன்மார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித்துக் கொள்ளும். தன் பாவக் கயிறுகளால் கட்டப்படுவான் (நீதி.5:22) துணிந்து தன் அக்கிரமங்களில் நடக்கிறவனின் உச்சந்தலையை உடைப்பார் என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே எச்சரிக்கை யாயிருந்து மனந்திரும்ப வேண்டும். யார்? அடுத்த வசனத்தில் கூறுகிறார்.

இப்போதும் ராஜாக்களே (அதிகாரி களே) உணர்வடையுங்கள், பூமியின் நியாயாதிபதிகளே எச்சரிக்கையா யிருங்கள்.

ராஜாவானாலும், மந்திரியானாலும், நியாயாதிபதியானாலும் இந்தப் பூமியில் இருக்கும்வரை தான் அவர்கள் தங்கள் அதிகாரத்தை, செல்வாக்கைப் பயன்படுத்த முடியும். மரித்துவிட்டால் அவர்கள் ஆவி பிரிந்துவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது. எல்லாரையும் நியாயந் தீர்க்கப் போகும் ஆண்டவர் இயேசுவுக்கு முன் பணிந்து கணக்கொப்புவிக்க வேண்டும்.

எனவே சங்கீதக்காரர் கூறுகிற காரியம் பயத்துடனே கர்த்தரை சேவியுங்கள். ஆண்டவர் இயேசு நம் பாவத்தை மன்னிக்க சுய வல்லமையுள்ள தேவன் சாதுவாக ஒரு ஆட்டைப்போல வந்து மரித்தார். இனி அவர் வரும்பொழுது பட்சிக்கிற அக்கினியாய் வருவார். அவருக்கு முன் நிற்க வேண்டும் என்ற பயத்துடனே கர்த்தரை ஆராதிக்கும் படி கூறுகிறார். நடுக்கத்துடனே களிகூருவது யார்? இரட்சிக்கப்பட்ட ஜனம் களிகூருகிற கிருபை செய்துள்ளார். அவர்களும் கர்த்தர் முன் நிற்கவேண்டும் என்ற பயம், நடுக்கம், வேண்டுமேயொழிய இரட்சிக்கப்பட்டு விட்டோம் எப்படியும் வாழலாம் என்ற மனநிலை ஆபத்தில் கொண்டு போய்விட்டுவிடும்.

குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ் செய்யுங்கள். கொஞ்சக் காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும். அவரை அண்டிக் கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள்.

சங்கீதக்காரர் கொடுக்கும் ஆலோ சனை, தேவன் மாம்சத்தில் குமாரனை இரட்சகர் இயேசுவாக வெளிப்பட்டார். அவரை அண்டிக் கொண்டால், பாக்கியம் இல்லா விட்டால் அவர் கோபம் பற்றி எரியும் அழிந்து போவார்கள். இரட்சிக்கப் படாத வர்களுக்கும் எச்சரிப்பு, இரட்சிக்கப் பட்டவர்களுக்கும் எச்சரிப்பு. ஆகவே அவரை அண்டிக்கொள்ளுகிற மக்களாக வாழ ஆண்டவர் இயேசு உன்னை அழைக்கிறார்.

*S.J.* தினகரன்-

---

## கொஞ்சம் சிரிங்க!!!




**பையன் ஒருவன் நாய்க்குட்டியின் கழுத்தில் கல்லைக் கட்டி விட்டான்.**
**ஒருவர்: ஏண்டா! நாயின் கழுத்தில கல்லக்கட்டி விட்டாய்?**
**பையன்: கல்லக்கண்டா நாயைக் காணோம், நாயைக்கண்டா கல்லைக் காணோம் எங்கிறாங்க. இப்ப இரண்டையும் ஒண்ணாக் கண்டிட்டுப் போறாங்க.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசமான உதவி!



ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசி எடுத்தது. ஒரு மரத்தின் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாகரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பற்றிப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு "யாராவது என்னைக் காப்பாற்றுங்கள்" என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது.

தற்செயலாக அப்பொழுது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் சிறிய கல் ஒன்றை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. 'பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே, அறிவில்லையா உமக்கு' என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் ஒன்றும் பேசாமல் மற்றுமொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெரு முயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாகப் பற்றிக் கொண்டு "நான் கீழே வந்தால் உம்மை சும்மா விட மாட்டேன்" என்று எச்சரித்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை எடுத்து அவன் மேல் வீசி எறிந்தார். அவன் ஆத்திரம் தாங்க முடியாமல் முயற்சி செய்து கிளை மேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்து அவன் நேராகப் பெரியவரிடம் வந்து அவரை சரமாரியாகத் திட்டினான். "ஏன் அப்படிச் செய்தீர்? உம்மிடம் நான் உதவிதானே கேட்டேன்?" என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே "தம்பி நான் உனக்கு உதவிதான் செய்தேன்" என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான். பெரியவர் விளக்கினார். "நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய் உன் மூளை வேலை செய்ய வில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்தது. நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன் என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார். சங்கீதம்119:71 "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன்".

மேய்ப்பன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிகேடு!



செல்வந்தனாக வாழ்ந்த ஒருவர் தான் மிகுந்த சொத்துக்களுடன் எல்லா வசதிகளுடன் வாழ்ந்தாலும் தனது கடந்த கால வாழ்க்கையை மறக்கவில்லை. அவர் தன்னோடு தொடர்புள்ள யாவருக்கும் தான் இந்த நிலைக்கு வருவதற்கு இறைவனே காரணம் என்று கூறித்திரிவார். மிகவும் செல்வந்தனாக இருந்ததின் நிமித்தம் பல வைபவங்களில் அவரை சிறப்புரையாற்றுவதற்கு அழைப்புக்கள் வரும். சமுதாயத்தில் நடக்கும் வைபவங்களிலெல்லாம் சாட்சியாக தனது வாழ்வின் வெற்றிக்கும் தனது இந்த உயர்ந்த நிலைக்கும் தானல்ல இறைவனுடைய அருள்தான் என்று முழங்கி அனைத்து மக்களுடைய பாராட்டையும் பெற்றுக் கொள்வார்.

ஆனால் தன்னிடமுள்ள செல்வத்தில் ஒரு சிறு பகுதியைத் தானும் ஏழை எளியவருக்கோ அல்லது தனது நலிந்த நிலையிலிருக்கும் உறவுவினர்களுக்கோ அவர் செலவு செய்யமாட்டார். தான் செய்வது தவறு மட்டுமல்ல அது தன்னை உயர்த்தின இறைவனுக்கும் பிரியமாக இருக்காது என்பதையும் அவர் அறியவில்லை. தான் செய்வது இறைவனுடைய நோக்கத்திற்கும் அவருடைய திட்டத்திற்கும் முரணான ஒரு செயல் என்றும் அது ஒரு பாவம் என்றும் அவரால் உணரக் கூடாமல் போயிற்று.

பரிசுத்த வேதாகமத்தில் ஒரு செல்வந்தனுடைய வாழ்க்கையை ஒரு கதையாக லூக்கா 12ம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளது. அவன் தன்னுடைய நிலங்கள் நன்றாய் விளைந்த காரணத்தால் அவைகளைத் தனக்காக அநேகம் ஆண்டுகளுக்கு சேர்த்து வைக்கும் வழிகளை யோசித்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்து இறைவன், மதிகேடனே, இன்று இந்த இராத்திரியில் நீ மரித்தால் நீ சேர்த்து வைத்தவைகள் யாருடையதாகும்? என்று கேட்டார்.

அவன் செய்த குற்றம் என்ன? அவன் யாருக்கும் எந்த தீங்கும் செய்யவில்லை. தனக்கு கிடைத்த மிகுந்த செல்வத்தை தனக்காக மட்டும் சேர்த்து வைத்து சுகமாயிருப்பதையிட்டு சிந்தித்துக் கொண்டதுதான். எல்லாம் தனக்காகவே இருக்க வேண்டும் என்று நினைப்பது இறைவனுடைய பார்வையில் ஒரு மதிகேடாக இருந்தது.

இறைவன் நமக்கு வாய்ப்புக்களையும் வசதிகளையும் தந்தால் அதை "எல்லாம் எனக்கே" என்ற எண்ணத்தினால் கட்டிவிடக்கூடாது. எல்லாவற்றையும். எமக்கென்று வைக்கும் போது மற்றவர்களுக்கு கிடைக்கும் நன்மைகளை நாம் அபகரித்து விட்டோம் என்பது தான் அதன் பொருள். சாலமோன் எனும் இராஜாவை இறைவன் அதிகமாக ஆசீர்வதித்தார் அவன் ஒரு சிறந்த ஞானியாக இருந்த போதும் தனது சுகபோகங்களுக்காகவே தனது பணத்தை செலவு செய்ததன் நிமித்தம் ஞானியாக திகழ்ந்தவன் ஒரு மதிகேடனாக மாறினான் என்று வேதம் கூறுகிறது. உங்கள் வாழ்வு நிலையற்றது. அதை உணர்ந்து செயல்படுங்கள்.

ஏழாலையூரான்

**பணம் உன்னிடத்தில் இருந்தால் வழிப்போக்கனும் உனக்குச் சொந்தம்**
**அது உன்னிடத்தில் இல்லையெனில் சொந்தத்திற்கும் நீ ஒரு வழிப்போக்கன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவடையாத குறை!

இன்றைய உலகில் வாழும் மனிதன் தன்னுடைய வாழ்வில் குறைவில்லாமல் வாழ வேண்டும் என்ற ஆவல் கொண்டவனாக வாழ்கிறான். குறைவில்லாமல் வாழ்வது நல்லது தான். ஒரு கேள்வி. எது இருந்தால் எம் குறை நிறைவாகும்?

பலர் தம் வாழ்வில் பணம் நிறைவாக இருந்தால் குறைவில்லாமல் வாழலாம் என்பார்கள். ஒருவரிடம் நான் சம்பாஷித்துக் கொண்டிருந்த போது அவர் சொன்னார் ஏராளமான பணத்தை நாம் சேகரித்து வைத்தால் எந்த நோய் வந்தாலும் எந்த நாட்டுக்கும் கொண்டு சென்று பெரிய பெரிய டாக்டர்களைக் கொண்டு வைத்தியம் செய்து காப்பாற்றி விடலாம் என்றார். இன்னுமொருவர் என்னிடம் பணம் இருந்தால் இந்த உலகத்தில் என்ன வேண்டுமானாலும் வாங்கலாம், செய்தும் முடிக்கலாம் என்று சொன்னார். இப்படியாக ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்வில் பணம் இல்லாத குறைதான் நிறைவாகாத பெரிய குறை என்கிறார்கள்.

அநேக மனிதர்கள் இந்தத் தேசத்தில் நல்ல வசதிகள் நிறைந்தவர்களாய், பணம், பல வீடுகள், பல வாகனங்கள் என்றெல்லாம் பல நிறைவுகள் உள்ளவர்களாகக் காணப்பட்டாலும் இன்று மனித வாழ்வில் சரீர நலக்குறைவு, பொருளாதாரக் குறைவு, ஐக்கியக் குறைவு, சமாதானக் குறைவு, சந்தோஷக் குறைவு என்று பல வகைக் குறைவுகள் மனிதனைப் பிடித்துள்ளது.

இந்த நிறைவான பணம், அந்தஸ்து எதுவும் அவர்களுடைய இந்தக் குறைகளை நிறைவாக்கவில்லை. ஒரு நாள் எல்லா நிறைவுகளோடும் வாழ்ந்த ஒருவர் ஒரு சாதாரண இறை ஊழியரைச் சந்தித்தார். அவர் அவரிடம் ஐயா! உங்களுக்குத் தேவையான அனைத்தும் உங்களிடம் இருக்கிறது என்று நம்புகின்றேன். ஆனால் உங்களைப் படைத்த தேவனின் துணை இருக்கிறதா? என்பது மட்டுமே எனக்குக் கேள்வியாக இருக்கிறது என்றார். இந்தக் கேள்வி அந்தச் செல்வந்தனின் மனதில் பெரிய அசைவை உண்டு பண்ணியது. சிந்திக்க ஆரம்பித்தார்.

ஆம் எந்தக் குறைவானாலும் தேவனால் அவைகள் நிரப்பப்பட முடியும். தேவன் (இறைவன்) அற்ற குறைவையோ பணத்தாலும், மனிதர்களாலும், சௌகரியங்களாலும், அதிகாரங்களாலும், உலக செல்வாக்கினாலும், அறிவினாலும், ஞானத்தினாலும் நிரப்பவே முடியாது. தேவ ஐக்கியம் என்ற ஆசீர்வாதத்திற்கு இணையாகவோ, மாற்றாகவோ இந்தப் பூமியில் எதுவும் இல்லை.

தாவீது ராஜா ஒருநாள் தேவ சமூகத்தில் கதறி அழுதான். அவனுக்கு அரசன் என்ற நிலையில் அனைத்தும் இருந்தது. ஆனால் பாவம் செய்ததின் நிமித்தமாக தேவ உறவை இழந்தான். அந்த ஒரே குறைவை வேறு எதனாலும் நிரப்ப முடியவில்லை. அதனால் அவன் தேவனைப் பார்த்து அந்த இரட்சண்ணியத்தின் சந்தோஷத்தைத் திருப்பித் தாரும் என்று கதறி அழுது ஜெபித்தான். (சங்கீதம்51:10-12)

உன்னுடைய வாழ்க்கையிலும் நிரப்ப முடியாத குறை இருக்கின்றதா? உன் வாழ்வை ஆண்டவர் இயேசுவிடம் ஒப்புக்கொடுத்து அவரிடம் கேள். அவர் உன் குறைவை நிரப்புவார். அவரோடு உன் ஐக்கியத்தை வைத்துக்கொள்.

*மேய்ப்பன் -*

---

**கொஞ்சம் சிரிங்க!!!**


**டாக்டர் 1: "சும்மா இருக்கிற ஆளுங்களெல்லாம் தங்கட பேருக்கு முன்னாடி டாக்டர் பட்டம் போட்டுக்கிறாங்களே..."**

**டாக்டர் 2: "அதுதான் இப்ப பாஷன்... நாம எதுக்கும் வேறு பட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்கள் எதற்காக?



பழங்கள் சுவையானவை மட்டுமல்ல. அவை உடலுக்கு நல்ல ஆரோக்கியமானவை. அதிலே அதிகமான ஊட்டச்சத்துக்கள் உண்டு. அதனால் பழங்கள் விலை அதிகமாக இருப்பினும் நாம் அவற்றை அதிகமாக வாங்கி உண்கிறோம். பல உணவுகள் பழங்களை விட சுவையாக இருந் தாலும் அவைகளை உண்பதனால் கேடுகள் உண்டாகும். ஆனால் பழங்கள் அப்படியல்ல. வியாதி வேளைகளில் வேறெல்லா உணவு களுக்கு தடை விதிக்கப்பட்டாலும் பழங்களுக்கு தடை வருவது மிகவும் அரிது.

பரிசுத்த வேதாகமும் பழங்களைக் (கனிகள்) குறித்து ஆவிக்குரிய விதத்தில் ஏராளமாக கூறியிருப் பதைக் காணலாம். ஒவ்வொரு மனிதனும் இறைவனுக்கு கீழ்படிந்து அவருக்கு உகந்த கனிதரும் வாழ்வை வாழவேண்டும் என்று அவர் பிரியமுள்ளவராக இருக்கின்றார்.

இஸ்ரவேல் எனும் ஒரு ஜனத்தை தனது சொந்த ஜனமாகத் தெரிந்தெடுத்து அவர்களுக்கூடாக முழு உலகமும் தனக்குரிய வர்களாக வாழவேண்டும் எனச் சித்தம் கொண்டார். ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகில் நற்பண்புள்ள வர்களாக கனிதரும் வாழ்வு வாழ வழி வகுத்தார். ஒரு மரமானது கனிகளை கொடுப்பது தனது பிரயோனத்திற்கல்ல அவைகள் மற்றவர்கள் நலன் பெறவே அவைகள் வாழ்கின்றன.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலங்களில் ஒருமுறை அவர் எருசலேமுக்கு போகும் வழியில் அவருக்கு பசி உண்டாயிற்று. தூரத்திலே இலை களுள்ள செழிப்பாகக் காணப்பட்ட ஒரு அத்திமரத்தைக் கண்டு அதில் ஏதாகிலும் கனி கிடைக்குமோ என எண்ணி அதனடியில் சென்றார். அதைப் பார்த்த போது, இலை களைத் தவிர கனிகளை காணாத படியினால், இது முதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியை புசியாதிருக்கடவன் என்றார். அந்த மரம் அப்புறம் வேரோடே பட்டுப்போனதை சீஷர்கள் கண்டார்கள்.


இன்று நம்முடைய வாழ்வும் வெளிப்படையாக செழிப்பாக இருந்தும் அதிலே நல்ல கனிகளைப் போல நற்பண்புகள் காணப்படா விட்டால் அது அந்த மரத்தைப் போன்றது. மற்றவர்களுடைய பார்வைக்கு நாம் நல்ல அந்தஸ்து கல்வி பொருளாதாரத்தில் மேம்பட்ட வர்களாக காணபட்டாலும் நமது வாழ்க்கையால் மற்றவர்களுக்கு ஒரு நன்மையும் இல்லையென்றால் அதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. அது பயனற்ற வாழ்வாகும். ஆண்டவராகிய இயேசு வாழ்ந்த நாட்களில் யூதர்கள் மத்தியில் உயர்ந்த அந்தஸ்தில் மற்றவர்கள் முன்பு நல்ல மதிப்புடன் வாழ்ந்த ஒரு சில கூட்ட மக்கள் அவரால் வெறுக்கப்பட்டார்கள். காரணம் அவர்களுடைய மாய்மாலமான வாழ்க்கையாகும். அவர்கள் வாழ்வு உள்ளொன்று வெளியொன்றாக இருந்தது. நாமும் அப்படியாக வாழ்வோமானால் அது இறை வனுக்கு பிரியமாயிருக்காது. ஆகை யால் பழம் சத்துள்ள உணவில் அவசியமாயிருப்பது போல நம் வாழ்விலும் கனி தரும் வாழ்வு அவசியமானது. அதுவே மெய்யான, எல்லாருக்கும் பயன் தரும் வாழ்வு

*ஏழாலையூரான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனஸ்தாபம்!



ஒருநாள் காலையில் நான் வாகனத்தை செலுத்திக் கொண்டு போகையில் காரில் உள்ள ரேடியோவில் தமிழ் நிகழ்சி ஒன்றைக் கேட்டேன். அதில் நிகழ்ச்சியை நடத்துகின்றவர்கள் ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார்கள். அதற்கான பதிலை எடுத்துவரும்படி கூறினார்கள். கேள்வி என்னவெனில் உங்கள் கடந்த கால வாழ்வில் நீங்கள் நினைவு கூருகின்ற, தவறவிட்ட சில காரியங்கள் இருப்பின் இப்பொழுது நீங்கள் அந்தக் காலங்களைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? என்னவாக ஆனால் நலமாயிருக்கும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது. அதற்குப் பலர் பல பதில்களைக் கூறினார்கள்.

ஒருவர் நான் என்னுடைய 16 முதல் 20 வயது காலத்துக்குப் போக விரும்புகின்றேன். ஏனென்றால் அப்பொழுது கள்ளுக் குடித்தது போன்று குடித்து வீதியில் சுற்றியது போல் வீதிக்கு வீதி சென்று பெண்களைப் பார்க்கலாம் என்றார். இன்னுமொருவர் சொன்னார் நான் மீண்டும் எனது 6 வயதுக் காலத்துக்குச் செல்ல விரும்புறேன். ஏனென்றால் நான் அந்த நாட்களில் பாடசாலைக்குச் செல்ல விருப்பமில்லை. அதனால் எனக்கு பல பொருட்களை வாங்கித் தந்தார்கள். அவற்றை எல்லாம் கோபத்துடன் வீசி எறிந்து விடுவேன். எனது அம்மம்மா அவைகளை எடுத்து வைத்து பின்னர் தருவார். சில உடைந்து போய்விடும். நான் என் பெற்றோரையும், அம்மம்மாவையும் எவ்வளவோ கஷ்டப்படுத்தினேன், துன்பப்படுத்தினேன். திரும்பவும் அந்த வயதுக்குப் போய் அவர்களுக்கு அப்படிச் செய்யாமல் எல்லாவற்றையும் அன்பால் செய்ய விரும்புகிறேன் என்றார். பல பதில்கள் இருந்தாலும் நான் இத்துடன் அதை நிறுத்திவிடுகின்றேன்.

இன்று மனித வாழ்வில் கடந்த காலத்தை நினைத்து மனஸ்தாபப்படுகிற வர்களும் உண்டு. இன்னும் சிலர் மீண்டும் அதே தவறை தொடர்ந்து செய்து கொண்டே இருக்க விரும்புகிறவர்களும் உண்டு. மனஸ்தாபப் படுதல் என்பது வேறு, மனந்திரும்புதல் என்பது வேறு. நாம் சில வேளைகளில் நம்முடைய தவறுகளை உணர்ந்து மனஸ்தாபப்படுவோம். ஆனால் தவறுகளை விட்டு விலகுவதற்கு ஏதுவாக மனந்திரும்பினோமா என்பது தான் முக்கியம்.

சிலர் குடித்து விட்டு இரவில் வந்து மனைவியை அடிப்பான். காலையில் போதை தெளிந்ததும் சே! இப்படி மிருகத்தனமாக நடந்து கொண்டேனே என்று மனஸ்தாபப்படுவான். ஆனால் மறுபடியும் இரவில் அதே நாடகம் தான். அது போலவே நம்மில் பலர் தேவனுடைய வார்த்தைகள் மூலம் உணர்த்தப்படுகிறோம், உணர்வடைகின்றோம். இருந்தாலும் அதை விட்டுவிட மனதில்லாதவர்களாக இருக்கின்றோம். சிலர் ஆண்டவர் என்னோடு பேசி உணர்த்தினார் என்று ஆலயத்தில் சாட்சியும் சொல்லுவார்கள். அவை உணர்த்துதலின் அனுபவம் மாத்திரமே. மறுபடியும் பழைய நிலைக்கே போய்விடுகிறோம். இது போலியான மனஸ்தாபமாகும். ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் எது தவறு என்று எண்ணி உண்மையாய் மனஸ்தாபப்படுகிறானோ அவன் மனந்திரும்புகிறவனாக மாற வேண்டும். பழையதை விட வேண்டும். புதிய மனிதனாக மாற வேண்டும். தவறைத் திருத்த அதே வயதை அடைவதல்ல. இப்பொழுதே மனந்திரும்பு, விட வேண்டியதை விட்டுவிடு. உன் மனஸ்தாபம் உண்மையாக இருக்கட்டும். யூதாசைப் போல மனஸ்தாபப்படுவதில் அல்ல, தாவீதைப் போல மனந்திரும்புகிறவர்களாகுவோம்.

மேய்ப்பன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனைத் தேட நேரமில்லை!



முன்னைய காலங்களைப் போல இல்லாமல் இன்றைய நாட்களில் பெரும்பாலான மக்கள் மிகவும் காலதாமதமாக துயிலெழுகின்றனர். ஏனென்றால் தொலைக் காட்சிப் பெட்டிக்கு முன்னால் இரவு வெகுநேரம் அமர்ந்து விடுவதால் சீக்கிரம் படுக்கைக்குச் செல்ல முடிவதில்லை. அநேகருக்கு நன்றாக உணவு நேரம் உண்டு. நன்றாக உடுக்க நேரமுண்டு. வீணான வார்த்தைகளை மற்றவர்களுடன் பேசி அரட்டையடிக்க நேரமுண்டு. தொலைக்காட்சியில் பல மணிநேரமிருந்து நிகழ்ச்சிகளை ரசிக்க விருப்பமுண்டு. ஆனால் இறைவனைத் தேட மட்டும் நேரமில்லை என்பார்கள். இது விசித்திரமானது.

சரீர தொடர்புடைய எல்லாக் காரியங்களையும் எப்படியாவது நிறைவேற்றிட தீவிரமாயுள்ள அநேகர் ஆத்தும நன்மைக்காக இறைவனைத் தேடும் விடயத்தில் பின்பு பார்க்கலாம் என்று அலட்சியமாய் இருக்கின்றார்கள். இவ்வுலகில் நாம் வாழும் வாழ்வு மிகக் குறுகியது. பரிசுத்த வேதாகமம் அதனை ஒரு புல்லுக்கு ஒப்பிட்டுக் காண்பிக்கின்றது. அதாவது மனிதனுடைய வாழ்வு காலையிலே முளைக்கின்ற புல்லைப் போல அது பூத்து மாலையிலே அறுப்புண்டு போவதைப் போன்றது. மட்டுமல்ல இறைவனுடைய பார்வைக்கு ஆயிரம் வருடம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம் போலவும் இருக்கிறது. அவர்கள் வாழ்வு ஒரு வெள்ளம் வாரிக்கொண்டு போவது போன்றது. எங்கள் ஆயுசு நாட்கள் ஒரு கதையைப் போல கழிந்து போகின்றது. எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருடம். பெலத்தின் மிகுதியால் எண்பது வருடமாயிருந்தாலும் அதின் மேன்மையானது வருத்தமும் துக்கமுமே. அது சீக்கிரமாய் கடந்து போகிறது. நாமும் பறந்து போகிறோம். (தேவ மனிதனாகிய மோசேயின் ஜெபம் - சங்கீதம்.90).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் தனது சீஷர்களுக்கு உலகத்தின் முடிவு காலங்களைப்பற்றிக் கூறும்போது அது ஆபிரகாமுடைய சகோதரன் லோத்துவின் நாட்களுக்கு ஒப்பிட்டு பேசினார். அந்நாட்களில் அவர்கள் துன்மார்க்கமான செயல்களோ அல்லது கொடிய பாவமான செயல்களோ அல்ல. அவர்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், (லூக்கா 17:28) அதாவது மக்கள் சுகபோகமான வாழ்வை விரும்பினார்கள். அதன் முடிவு அவர்கள் வாழ்வு அழிந்தது என்று வேதம் எச்சரிக்கின்றது. அதனாற்தான் மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் வாழ்வை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு என்ன இலாபம்? தன் ஜீவனுக்கு ஈடாக அவன் என்னத்தை கொடுப்பான்? என்று ஆண்டவர் இயேசு கூறினார்.

ஆகையால் நாம் நம் வாழ்வை நஷ்டப்படுத்தாதபடி இறைவனை அனுதினமும் தேடுவோம். அதிகாலையில் என்னைத்(இறைவனைத்) தேடுபவர்கள் என்னை கண்டடைவார்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

ஏழாலையூரான்

**நல்லவர்களின் கடினமான வார்த்தைகள் கசப்பானதுதான்**
**ஆனால் நோயைக் குணப்படுத்தும்...!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*And they devoted themselves to the apostles' teaching and the fellowship, to the breaking of bread and the prayers. And awe came upon every soul, and many wonders and signs were being done through the apostles. And all who believed were together and had all things in common. And they were selling their possessions and belongings and distributing the proceeds to all, as any had need. And day by day, attending the temple together and breaking bread in their homes, they received their food with glad and generous hearts, praising God and having favor with all the people. And the Lord added to their number day by day those who were being saved. (Acts 2:42 to 47)*

THE DREAM CHURCH

The Core values of the church (The four anchors; the four Priorities- 2:42)

Committed to Bible study (The Truth Transforms)

Caring for fellow believers' (The Tie; 2:42, 44, 45, 46)

Fellowship means common participation in something either by giving what you have to the other person or receiving what he or she has. Unity of purpose.

*Love cannot exist in isolation: away from others, love bloats into pride. Grace cannot be received privately: cut off from others, it is perverted into greed. Hope cannot develop in solitude: separated from the community, it goes to seed in the form of fantasies. No gift, no virtue can develop and remain healthy apart from the community of faith. Outside the church there is no salvation"is not ecclesiastical arrogance but spiritual common sense, confirmed in everyday experience. (Eugene Peterson)*

Commemorating the Lord's death and resurrection (The Table; 2:42, 46)

Communing with the Lord (The Throne)

The Combined sense of awe (2:43a) *Reverential fear of the Lord*
To be filled with the Spirit is to be filled with awe (2:4, 43)

Encountering the Lord
Enjoying the Lord
Exalting the Lord

Credible, authentic leadership (2:43) The Apostles

Trained by the Lord Himself
Trusted by the Lord to lead His people

CAPTIVES set free by God's power (2:43)
People were being healed physically, spiritually and emotionally. Demons cast out. Satanic strongholds demolished. Relationships were being mended. Marriages were being restored. Addictive behaviour abandoned. The chains of sin were being loosed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Coming together daily in the Temple courts (2:46) Togetherness

Cell groups in homes (2:46b)
Hospitality
Happiness
Honesty (Sincere hearts)

Celebration of the Lord (2:47a)
Sing and shout His praises

THE DELIGHTED COMMUNITY (2:47)

The Attractive witness of the church
*"By this all people will know that you are my disciples, if you have love for one another."* *(John 13:35)*

The Attention of the community *("Looked up to by all")*

The Acknowledgement by the community *("Spoke highly of them")*

THE DAILY CONVERSIONS (2:48b)

Fervent Prayer for the lost
Faithful Proclamation of the Gospel

My commitment to the Lord of the Church:
I will not Forsake the assembling of the people of God
I will Fearlessly proclaim the Gospel
I will Find time to study the Word and to pray
I will Foster healthy relationships with all
I will Forgive those who hurt me
I will Faithfully give to the Lord's work
I will seek to be Free of all addictions by the power of the Holy Spirit
I will Fight the Lord's battles

We further engage to maintain family and secret devotion; to study diligently the word of God; to religiously educate our children; to seek the salvation of our kindred and acquaintance; to walk circumspectly in the world; to be kind and just to those in our employ, and faithful in the service we promise others; endeavouring in the purity of heart and goodwill towards all men to exemplify and commend our holy faith.
We further engage to watch over, to pray for, to exhort and stir up each other unto every good word and work; to guard each other's reputation, not needlessly exposing the infirmities of others; to participate in each other's joys, and with tender sympathy bear one another's burdens and sorrows; to cultivate Christian courtesy; to be slow to give or take offence, but always ready for reconciliation, being mindful of the rules of the Saviour in the 18th chapter of Matthew, to secure it without delay; and through life, amid evil report, and good report, to seek to live to the glory of God, who has called us out of darkness, and into His marvellous light.

***PASTOR BENJAMIN DEVADASON***
***bdevadason@hotmail.com***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோர்களின் பாவம்

"இதோ தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார். அவர்களோ அநேக உபாய தந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள்". (பிரசங்கி7:29). "அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே. பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே" (மல்கியா2:15). ஆனால் தேவனை மறந்து பாவம் செய்யும் போது ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர். "ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர்" (யாத்34:7, எண்14:17) "தேவன் நீதியுள்ள நியாயாதிபதி; அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன். அவன் மனந்திரும்பாவிட்டால் அவர் தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார்"

மோசே என்னும் மனிதனோடு தேவன் பேசும்போது "அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும் செவிடனையும் பார்வையுள்ளவனையும் குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா? (யாத்4:11). மனிதனுடைய அக்கிரமம் தேவ சமூகத்தில் எட்டி, அதுவே அவனுக்கு ஆக்கினைகளை இழுத்துக் கொண்டு வருகிறது. சொத்துக்களை அநியாயமாக, அதாவது மோசடி செய்தோ, ஏமாற்றியோ, பிறருக்கு இன்னும் பலவிதமான வழிகளில் தீங்கு செய்யும் பொழுது அவர்களுடைய பாவங்கள் அவர்களுக்குப் பின்வரும் சந்ததியையும் ஆட்டிப் படைக்கின்றது.

ஒரு நாள் ஒரு பிரசங்கியாரை ஒரு செல்வந்தன் தன்னுடைய கப்பல் போன்ற காரிலே தன்னுடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றார். முதலாவத ஒரு அறையின் பக்கமாகச் சென்று காட்டினார். அறையினுள்ளே நீளமாக வளர்ந்த முடியுடன் அவருடைய மனைவி பைத்தியம் பிடித்தவளாய் நிர்வாணமாக நின்று கொண்டிருந்தாள். இரண்டாவதாக ஒரு அறைக்குள் அழைத்துச் சென்ற பொழுது 25 வயது வாலிபன் தலை பெருத்தும், முகத்தில் நன்கு தடித்த மீசையுடனும், உடலும் நன்கு வளர்ந்தும் கை, கால்கள் மாத்திரம் சிறிய குழந்தையின் கால்கள் போன்று வளர்ச்சியற்றவனாய் அவருடைய மகன் ஒரு கட்டிலிலே படுத்திருந்தான். அதன் பின்பு இருவரும் வந்து சாப்பிட உட்காரும் பொழுது பிரசங்கியாருக்குப் பலவித உணவும், தனக்கோ கேழ்வரகக் கூழும் சாப்பிட வைக்கப்பட்டிருந்தது. காரணம் என்னவெனில் அவருக்கோ சர்க்கரை வியாதி. புணம் இருந்து என்ன பிரயோஜனம்? மன சமாதனம் இல்லாமல் வியாதி முழுக்குடும்பத்தையும் பிடித்து ஆட்டுகின்றதல்லவா?

இன்றைக்கு நாம் துணிகரமாக பாவச் செயல்களைச் செய்து பின்வரும் சந்ததிகளையும் கேடான நிலைக்கு ஒப்புக்கொடுக்கிறோம். எசேக்கியேல்18:18,19 "அவன் தகப்பனோவென்றால் கொடுமைசெய்து, சகோதரனைக் கொள்ளையிட்டு, தகாததைத் தன் ஜனங்களின் நடுவிலே செய்தபடியினால், இதோ, அவன் தன் அக்கிரமத்திலே சாவான். இதெப்படி, குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமக்கிறதில்லையா என்று நீங்கள் கேட்டால், குமாரன் நியாயத்தையும் நீதியையும் செய்து, என் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்ததினால், அவன் பிழைக்கவே பிழைப்பான்".

அடுத்த இதழில் பெற்றோரின் பாவம்

நன்றி போல் ராஜதுரை —

**எல்லாவற்றையும் என்றோ ஒருநாள் இழந்துதான் ஆக வேண்டும் என்பதை உணர்ந்தவன் எந்த இழப்புக்கும் சோர்ந்து போவதில்லை.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லதைக் கண்டால்.....



நெரிசல் மிகுந்த ரயிலில் ஒருவர் ஒரு இருக்கையில் உட்கார முயன்றார். ஆனால் அது 3 பேர் மட்டுமே உட்காரும் இருக்கையாகும். அதில் இருந்தவர்கள் அவரை உட்கார அனுமதிக்கவில்லை. அதில் உட்கார்ந்த மூன்று பேரும் அனுசரித்திருந்தால் அவர் இருக்க கொஞ்சம் இடம் கிடைத்திருக்கும். அவர்களோ அதை விரும்பவில்லை. இந்த நபருக்கோ கடுமையான கோபம். தனது உள்ளத்திற்குள் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தார். அதைப் பார்த்துக் கொண்டிருந்த அவர் எதிரில் உட்கார்ந்த இன்னொருவர் எழுந்து நின்று இவருக்கு உட்கார இடம் கொடுத்தார். ஆயினும் அந்த மனிதனால் தன்னுடைய கோபத்தை அடக்க முடியவில்லை. தனக்கு இடம் கொடாதவர்களையே எண்ணி எண்ணி கோபத்தோடு முனங்கிக் கொண்டிருந்தார்.

மற்றவர்கள் செய்யாமல் போன நல்லதை எண்ணி மனிதன் அதிகமாக மனதில் கொந்தளிக்கின்றான். ஆனால் தனக்கு நன்மை செய்தவனை சில நேரங்களில் மறந்து விடுகின்றான். யாரோ ஒருவர் செய்த தீமையைக் குறித்த எரிச்சலான சிந்தனைகள் மனதில் அதிகமாக இருப்பதனால் நன்மை செய்தவர்களையே மறந்து விடும் சூழ்நிலை உருவாகின்றது. இதனால் நன்மையால் நிரம்ப வேண்டிய இருதயம் தீமையான சிந்தனைகளால் அது கசப்பினால் நிரம்பி விடுகிறது.

தீமையான எண்ணங்கள் நிறைந்த மக்கள் வாழும் உலகம் தான் இது. ஆனால் நன்மை செய்பவர்களும் உண்டு. ஆகையால் அவர்களை நினைத்து நாம் நல்ல சிந்தனைகளை இருதயத்தில் உருவாக்க வேண்டும். கசப்பான சிந்தனைகளுக்கு இடமளிக்கக் கூடாது. பரிசுத்த வேதாகமத்தில் காயீன் தனது சகோதரன் மீது எரிச்சல் அடைந்த போது இறைவன் அவனைப் பார்த்து ஏன் உன் முகநாடி வேறுபட்டிருக்கின்றது? நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசல் படியில் படுத்திருக்கும் என்று கூறினார். தீமையான எண்ணங்கள் எம்மை தீமைக்கே வழிநடத்தும். அதனால் நாம் இறைவனுடைய திட்டத்திற்கும் அவருடைய நோக்கத்திற்கும் உடன்படாமல் அவருக்குப் பிரியமான காரியங்களைச் செய்வதை விட்டு விலகிவிடுகின்றோம். அதுவே பாவம் என்று பரிசுத்த வேதாகமம் கோடிட்டு காண்பிக்கிறது. இதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்வோமானால் நம் வாழ்வில் நன்மைகளைக் கண்டையலாம்.

பரிசுத்த வேதாகமம் கூறும் சத்தியம் அதுவே. சத்தியத்தை நாம் அறிந்தால் சத்தியம் நம்மை விடுதலையாக்கும். ஏனென்றால் பாவம் செய்கிறவன் பாவத்திற்கு அடிமையாக இருக்கின்றான். அவனுக்குள் குடிகொண்டுள்ள பாவமானது அவனைச் சிந்திக்க விடுவதில்லை. அதைத்ததான் இருளில் இருக்கிறவன் இருளிலே நடக்கின்றான். அவன் தான் எங்கு போகின்றேன் என்று தெரியாமல் செல்கிறான் என்று வேதம் கூறுகிறது. ஒரு சிறு ஒளியானது அவன் வாழ்வில் பிரவேசிக்கும் போது மட்டுமே அவனால் தான் இருளிருப்பதை அறியமுடியும். இறைவன் ஒளியாக இருக்கின்றார். நாம் இறைவனிடத்தில் சேருவோம். அவர் நம்மை தம்மண்டை சேர்ப்பார்.

*ஏழாலையூரான்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மை சுமக்கின்ற நம் இறைவன்!

தன்னுடைய சின்ன மகனை தகப்பன் தன் மார்போடு அணைத்தபடி பூங்காவுக்கு வந்தான். அதனுள்ளே வந்ததும் மகனை கீழே இறக்கிவிட்டான். பின்பு மகனை ஓட விட்டு அவனுக்கு முன்பாக மெதுவாக ஓடுவது போல காண்பித்தான். அந்த சின்ன மகன் மூச்சு இழைக்க இழைக்க ஓடினான். ஒரு சிறிது நேரம் கழித்து திரும்பவும் ஓடும்படி உற்சாகப்படுத்தினான் அந்த தகப்பன். மகனை சுமப்பது மட்டுமல்ல அவனை நடக்கவும் ஓடவும் ஏற்ப பயிற்சியைக் கொடுப்பது தகப்பனுடைய கரிசனையாக இருந்தது.

இறைவாழ்க்கையும் இப்படியே. இறைவன் நல்ல அன்புடைய தகப்பனாக பல வேளைகளில் நம்மைத் தூக்கிச் சுமந்து சுகம் தருகின்றார். ஆனாலும் எப்போதும் சுமக்கும் அனுபவம் அல்ல. சில வேளைகளில் நம்மை சிரமங்களின் மத்தியில் களைத்துப் போகவிடுகிறார். பிரச்சனைகள் வரும்போது நம்மை அதில் போராடும்படி விடுகிறார். நாம் அதில் சோர்ந்து போகும் வேளையில் நம்மைத் தூக்கி விடுபவரும் அவரே. நாம் தொடர்ந்து நம் வாழ்வில் சளைக்காமல் முன்னேறிச் செல்ல அவர் நமக்கு உற்சாகம் தந்து நம்மை நடத்துகின்றார்.

நாம் வாழ்க்கைப் போராட்டங்களின் நடுவில் வாழ கற்றுக் கொள்ளவேண்டும். எந்த சூழ்நிலைகளையும் சந்திக்க நல்ல முயற்சிகளும் சிந்தனைகளும் அவசியமானது. இந்த உலக வாழ்க்கை சிரமம் ஒன்றும் இல்லாததொன்று என்று இறைவன் நமக்கு வாக்குறுதி தரவில்லை. உலகத்தில் உங்களுக்கு உபத்திரவங்கள் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என்று ஆண்டவராகிய இயேசு கூறினார். (யோவான்16:33). மேலும் வேதம் சொல்லுகிறது, அவர் சோதிக்கப்பட்டு பாடுபட்டபடியினால் சோதிக்கப் படுகிறவர்களுக்கு உதவி செய்ய அவர் வல்லவராய் இருக்கின்றார். (எபிரேயர் 2:18) நமது வாழ்க்கைப் போராட்டத்தில் நாம் சற்று தோல்வி அடைந்தாலும், நாம் அதிலே நின்று விடாமல் நல்ல பாடங்களை கற்று நாம் முன்னேறிச் செல்ல அவர் விருப்பமுள்ளவராக இருக்கின்றார். வருத்தப்பட்டு பாரம் சுமக்கின்றவர்களே! நீங்கள் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று நம்மை அழைப்பதாக நாம் பரிசுத்த வேதாகமத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியிருப்பதை நாம் காணலாம்.(மத்தேயு 11:28)

மேலும் பரிசுத்த வேதாகமத்தில் பல தேவ மனிதர்களுடைய வாழ்க்கை குறிப்பாக யோசேப்பின் வாழ்க்கையில் இறைவன் அவரை எகிப்து தேசத்தில் உயர்த்தி தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு அவர் சென்ற பாதைகள் எவ்வளவு கடினமானதாய் இருந்ததையும். அந்த வேளைகளில் இறைவன் அவரை வழிநடத்தியதையும் நாம் ஆதியாகம புத்தகத்தில் காணலாம். ஆகையால் நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை என்று வாக்களித்த எமது தகப்பனிலும் மேலான அன்பு நிறைந்த நமது இறைவன் நம்மை கைவிடுவாரோ? இல்லை, அவர் ஒருபோதும் கைவிடார். ஒரு நாளும் விலகிடார்.

*ஏழாலையூரான்*

---

## கொஞ்சம் சிரிங்க!!!

**பையன் ஒருவன் நாய்க்குட்டியின் கழுத்தில் கல்லைக் கட்டி விட்டான்.**


**ஒருவர்: ஏண்டா! நாயின் கழுத்தில கல்லக்கட்டி விட்டாய்?**

**பையன்: கல்லக்கண்டா நாயைக் காணோம், நாயைக்கண்டா கல்லைக் காணோம் எங்கிறாங்க. இப்ப இரண்டையும் ஒண்ணாக் கண்டிட்டுப் போறாங்க.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்மகாரம்!



மனிதன் தன் வாழ்க்கையில் தனக்குரியவைகளை நன்றாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உள்ளவனாக வாழ்கின்றான். அதில் எந்த விதமான தவறுகளும் கிடையாது. ஆனால் நம்மைச் சூழ்ந்திருக்கும் நம் இன மக்கள், உறவுகள் போன்ற அநேக மக்களுக்குள்ளே ஒரு மனிதன் நன்றாக வசதியாக இருப்பதையோ, எதையாவது புதிதாகச் செய்தாலோ, அல்லது மற்றவர்களால் நன்றாகப் புகழ்ந்து பேசப்பட்டால் அதை விரும்பாதவர்களாவும் அவர்களைக் காய்மகாரமாகப் பார்க்கவும் தொடங்குகிறார்கள்.

பரிசுத்த வேதாகமத்தில் ஒரு சம்பவம் கூறப்பட்டுள்ளது. பாருங்கள்! 1சாமுவேல்18ம் அதிகாரத்தில் பெலிஸ்திய ராட்சத மனிதனாகிய கோலியாத் என்பவன் இஸ்ரவேல் ஜனங்களை எதிர்த்து சண்டைக்கு அழைத்தான். அவன் பெரிய உருவம் கொண்டவனும், பலசாலியுமாக இருந்தான். அவனுக்குப் பயந்து சவுல் ராஜாவும் எதிர்க்க முடியாதவனாக இருந்தான். ஆனால் தாவீது என்னும் பையன் அவனை எதிர்த்துத் துணிவுடன் ஒரு கவணில் கல்லை வைத்து அடித்தான். அது கோலியாத்தின் நடு நெற்றியில் படவே அவன் மலை போல் சாய்ந்து விழுந்தான். அதனைக் கண்ட இஸ்ரவேல் மக்கள் நடனத்தோடும் பாடல்களோடும், மேளதாளத்தோடும் ராஜாவாகிய சவுலையும், தாவீதையும் வரவேற்றார்கள்.

அந்த வேளையிலே அவர்கள் பாடும் போது சவுல் கொன்றது ஆயிரம் தாவீது கொன்றது பதினாயிரம் என்று புகழ்ந்து பாடினார்கள். இதனைக் கண்ட சவுல் தனக்கு ஆயிரமும், தாவீதுக்குப் பதினாயிரமும் கொடுக்கப்பட்டுள்ளது என்று கண்டு அவனுடைய இருதயம் வேறாக மாறியது. 1சாமு18:8,9 “அந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயிருந்தது; அவன் மிகுந்த எரிச்சலடைந்து, தாவீதுக்குப் பதினாயிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார்கள்; இன்னும் ராஜாங்க மாத்திரம் அவனுக்குக் குறைவாயிருக்கிறது என்று சொல்லி, அந்நாள்முதற்கொண்டு சவுல் தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான்”.

பாருங்கள்! ஒரு மனிதனுக்கு பேரும் புகழும் வரும் போது மற்றவர்களுக்கு வருகின்ற காய்மகாரமான எண்ணம் அவர்களுடைய வாழ்வையே பாழாக்கு கின்றது என்பதை அறியாமல் இருக்கிறார்கள். “பெலிஸ்தர் இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள்; இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி, கில்போவா மலையிலே வெட்டுண்டு விழுந்தார்கள். பெலிஸ்தர் சவுலையும் அவன் குமாரரையும் நெருங்கித் தொடர்ந்து, சவுலின் குமாரராகிய யோனத்தானையும் அபினதாபையும் மல்கிசூகாவையும் வெட்டிப் போட்டார்கள். சவுலுக்கு விரோதமாய் யுத்தம் பலத்தது; வில்வீரர் அவனைக் கண்டு நெருங்கினார்கள்; அப்பொழுது சவுல் வில்வீரரால் மிகவும் காயப்பட்டு, தன் ஆயுததாரியை நோக்கி: அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து, என்னைக் குத்திப்போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் குத்திப்போடு என்றான்; அவனுடைய ஆயுத தாரி மிகவும் பயப்பட்டதினால், அப்படிச் செய்யமாட்டேன் என்றான்; அப்பொழுது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான். சவுல் செத்துப்போனதை அவன் ஆயுததாரி கண்டபோது, அவனும் தன் பட்டயத்தின்மேல் விழுந்து, அவனோடேகூடச் செத்துப்போனான். அப்படியே அன்றையதினம் சவுலும், அவன் மூன்று குமாரரும், அவன் ஆயுததாரியும், அவனுடைய எல்லா மனுஷரும் ஒருமிக்கச் செத்துப்போனார்கள்.(1சாமு31:1-6) மனித வாழ்வில் காய்மகாரம் உண்டாயிருக்குமானால் அது அவனையும் அவன் குடும்பத்தையும் அழித்துப் போடும். நமது வாழ்வை ஆராய்ந்து பாருங்கள்

மேய்ப்பன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநியாயக் கூலி!

ஒரு ஸ்கொட்லாந்துக்காரர் புண்ணிய பூமியான பாலஸ்தீனத்துக்குச் சென்றார். கலிலேயாக் கடலில் படகில் செல்ல விரும்பினார். படகு ஓட்டிக்கும் அவருக்கும் உரையாடல் நிகழ்ந்தது.

**ஸ்கொட்லாந்துக்காரர்**: ஐயா படகில் செல்வதற்கு எவ்வளவு கூலி வேண்டும்?

**படகோட்டி:** மூன்று ஸ்டெலிங் ஆறு பென்ஸ்

**ஸ்கொட்லாந்துக்காரர்**: அடேயப்பா எங்கவூரில் வெறும் ஆறு பென்ஸ் மட்டும்தானே

**படகோட்டி:** அது உங்க ஊரையா. இது கலிலேயாக்கடல், இயேசு கிறிஸ்து நடந்து சென்ற கடலையா இது.

**ஸ்கொட்லாந்துக்காரர்**: அதுதானே பார்த்தேன், உங்கள் அநியாயப் படகுக் கூலியைப் பாவம் அந்த ஏழையால் எப்படி கொடுக்க முடியும்? அதனால் தான் அவர் கடல் மேல் நடந்தே சென்றிருக்கிறார்.

## கடவுள்! கடவுள்!

இரண்டு நீர்ப்பாம்புகள் வறண்டு போன ஒரு குளத்திலிருந்து வெளியேறின. நீ வழிகாட்டு நான் பின்னால் வருகிறேன். மனிதன் கண்களில் பட்டால் நம்மைக் கொன்று விடுவார்கள். எனவே நீ உன் முதுகில் என்னை ஏற்றிக்கொள். உன் வாலை என் வாயுக்குள் வைத்துக் கொள். உன் வாலை என் வாயுக்குள் வைத்துக் கொள்கிறேன். நம்மைப் பார்த்த மக்கள் கடவுள் என்பார்கள். நாம் தப்பித்துக் கொள்ளலாம். என்றது.

ஆம் அப்படியே செய்து பெருவழியைக் கடந்தன. அவைகளைக் கண்ட மக்கள் "கடவுள் கடவுள்" என்று வழிபட்டார்கள். மனிதனின் மூடத்தனத்தை ஊரும் பிராணிகள் கூட உணர்ந்திருக்கின்றன.

கொஞ்சம் சிரிங்க!!!

**ஒரு மாணவன்: எங்கப்பா ஆபீசிலிருந்து பேனா கொண்டு வருவாரு, பேப்பர் கொண்டு வருவாரு...**

**சக மாணவன்: இது என்ன அதிசயம் எங்கப்பா ஆபீசிலிருந்துதான் எங்கம்மாவைக் கொண்டுவந்தாரு.**



## முதன் முறையாக இந்த சஞ்சிகையை படித்துக் கொண்டிருக்கிறீர்களா?

1- இந்த சஞ்சிகை எப்படி உங்களுக்குப் பிரயோஜனமாய் இருந்தது என எங்களுக்கு எழுதுங்கள்.

2- மற்றவர்களுக்கு இந்த சஞ்சிகையை அறிமுகப்படுத்துங்கள்.

3- இதனைத் தொடர்ந்து தபாலில் பெற விரும்பினால் தொலைபேசி வாயிலாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ உங்கள் தெளிவான முகவரியை தெரியப்படுத்துங்கள்.

4- இந்த சஞ்சிகை ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

5- இந்த ஊழியத்தைத் தாங்குங்கள். உங்கள் மனதில் ஏவப்பட்டபடி உதவுங்கள்.

6- உங்கள் கருத்துக்கள், ஆக்கங் களை எழுதி அனுப்புங்கள். தகுதியானவை பிரசுரிக்கப்படும். முடிவு வெளியீட்டுக் குழுவினுடையது.

7- ஆலோசனை தேவைப்படின் தொடர்பு கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை முற்றம்

## அமைதியாய்!

அமைதியாய் அமைதியாய் உம்மோடு
பொழுது புலர்கையில், பறவைகள் எழுகையில்
விடியலைவிட அழகாய், ஒளியிலும் சிறப்பாய்
நான் உம்மோடுள்ளேன், இனிய எண்ணமே.

உம்மோடு தனியாய், கரிய நிழல்களில்,
இயற்கையின் இனிய புதிய விடியலில்,
உம்மோடு தனியாய் பெரு வணக்கத்துடன்,
இனிய காலையில், புதிய பனியமைதியில்.

அலையில்லாக்கடலின், அழகிய விடியலில்
விடிவெள்ளியின் பிம்பம் தெரிகையில்,
இலையசையா இவ்வமைதியில் காண்பேன்
உம்சாயலை என் இதயத்தினில்.

ஆன்மா அயர்ந்துறங்கச் செல்கையில்,
மூடு கண் நோக்குது உம்மை ஜெபத்தில்,
ஆன்மா அமைதியாய் உறங்கும் உம் செட்டையில்
இதைவிட இனிதே, விழித்தலில் உம்மைக்
காண்பதே.

## அமைதி!

இதயத்தில் அமைதி இருப்பின்,
உள்ளத்தைக் கலக்கும் எப்புயலும்
இனிய அழகுள்ளதாக்கிடுமே.
இரவுமின்னலும் உன் சேவை
வழிதனைக் காட்டிடும்.

வாழும் ஒவ்வொரு சிறுவழ்டியும்,
வழி காட்டிக் கூறும் மகிழ்கதையை.
இதயத்தில் அமைதியிருப்பின்
கல்லும் மரமும்கூட அழகு நிறைந்து காணப்படும்.

## உனக்காக!

"உனக்கு முன்னாலவர்" துன்பத்தின்
பாதையனைத்திலும் நடந்தார்.
உனக்காகத் தலை குனிந்து குட்டுகளையும்
வாதை துன்பம் நோவையும் தாங்கினார்.
நெடுநேரம் உதவியின்றிப் பாடு சகித்தார்.
மரணத்தின் கசப்பையெல்லாம் அருந்தினார்,
சொட்டில்லாது குருதியனைத்தும் விட்டார்
உனக்கு முன்னாலவர் உன் பேரில்
உனக்காக வெற்றியடைந்தார்,
ஒளி நாட்டின் மகிமையை உனக்குத் தரவே.

## கோபம்!

உன் குணத்தை
கோபத்தில்
இழந்த போது
உன் முகத்தில்
முளைத்துவிடுகிறது
கோரப்பற்கள்..!

## பணி

காயங்கள் ஏதுமில்லாமல்
கண்ணீரின் பாதை செல்லாமல்
கர்த்தரின் பணி உண்டோ?
சொர்க்கத்தின் சுகத்தையும் நம்
பக்கத்தின் வரத் துறந்து
இறுதிச் சொட்டு இரத்தத்தையும்
இருளிலிருப்போருக்காய் சிந்தியவரின்
பாதங்கள் அழகானது ஆணிகளாலேயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயாதீன மெதடிஸ்த தமிழ் திருச்சபை மிசிசாகா

வெள்ளிக்கிழமை மாலை 7:30 மணி வேதப்படிப்பு

மாதத்தின் கடைசி வெள்ளி இரவு 9:00 மணி இரவு விழிப்பு ஜெபம்

முதலாவது சனிக்கிழமை காலை 10:30 மணி உபவாச ஜெபம்

முதலாவது, மூன்றாவது சனிக்கிழமை மாலை 4:30 மணி வாலிபர் ஐக்கிய கூட்டம்

இரண்டாவது, நாலாவது சனிக்கிழமை மாலை 4:00 மணி வீட்டு ஜெபக்கூட்டம்

ஞாயிறு காலை 9:30 மணி வாலிபர் வேதப்படிப்பு, ஞாயிறு பாடசாலை, பெரியவர்களுக்கான வேதப்படிப்பு

ஞாயிறு காலை 10:30 மணி விடுதலையின் ஆராதனை

#41-3045 Southcreek Rd, Mississauga,Ont
(Dundas & HWY 427)
Tel: 905-232-3910
Email: fmtchurch@gmail.com www.fmtcm.ca

தேவ செய்திகளை YouTube கேட்கலாம்
Free Methodist Tamil Church

## விசுவாசிகளின் எழுப்புதல் தமிழ் திருச்சபை பிரம்டன்

ஞாயிறு ஆராதனை மாலை 2:30 மணி
ஓய்வுநாட்பாடசாலை மாலை 2:30 மணி
உபவாச ஜெபம் 2வது சனிக்கிழமை காலை 10:30 மணி
வேதப்படிப்பு 1வது 3வது வெள்ளிக்கிழமை மாலை 7:00 மணி
விழிப்பு ஜெபம் மாதத்தின் கடைசி வெள்ளி இரவு 8:00 மணி
355,Howden Blvd, Brampton, Ont. (Dixie & Queen)
Tel: 905-306-1321 Email: brtamilchurch@gmail.com

## விசுவாசிகளின் எழுப்புதல் தமிழ் திருச்சபை மல்வன்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 மணி
ஓய்வுநாட்பாடசாலை மாலை 5:00 மணி
வேதப்படிப்பு, வீட்டுக் கூட்டங்கள் நடைபெறுகின்றது.
2,Morningview Trail, Scarborough, Ont
(Morningside & Morningview Trail)
Tel: 416-697-1321 Email: brtamilchurch@gmail.com

## ஜெபதேவைகள், ஆவிக்குரிய தேவஆலோசனைகள், மேலும் விபரங்களுக்கு அழையுங்கள்

**(905) 232-3910 (905) 306-1321 (416) 697-1321**

**Email:**
**fmtchurch@gmail.com**
**Brtamilchurch@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கையில் கிறிஸ்துவின் பணி



திருமதி. சுதர்சினி நவக்குமார் அவர்கள் தனது தாயாரின் நினைவாக ஒரு விதவைத் தாய்க்கு 30,000 ரூபாய் கொடுத்து உதவினார். இந்தத் தாயின் மகள் திருமணமாகி ஒரு பிள்ளை இருக்கின்றது. அந்தத் தகப்பன் தாயையும் பிள்ளையையும் விட்டு விட்டுப் போய் விட்டான். இந்தத் தாயார் தான் பிள்ளையையும், பேரப்பிள்ளையையும் பராமரித்து வருகின்றார்.



திரு. கமலநாதன் அவர்கள் மிகவும் கஷ்ட நிலையில் வாழும் ஒருவருக்கு பணம் கொடுத்து உதவி செய்யும்படியாகக் கூறி 20,000 ரூபாய் கொடுத்தார். இந்தப் பெண் மிகவும் கஷ்ட நிலையில் யாரோ ஒருவரின் காணி ஓரத்தில் ஒரு வாய்க்காலின் அருகில் சிறு குடிலில் அவளும், பிள்ளைகளும் வசிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org